இலவச பிரதி

Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 ஆனி -04 18-06-2005 சனிக்கிழமை ஓசை 120



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247 (சி-12121)

## பொதுக்கட்டமைப்பை உருவாக்க வலியுறுத்தி தென்மராட்சியில் 3ஆவது நாளாகப் போராட்டம்



(தென்மராட்சி)

பொதுக்கட்டமைப்பு அமுல்செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து யாழ். தென்மராட்சியில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டங்களின் மூன்றாம் நாளான நேற்று கொடிகாமம் பகுதியில் அடையாள உண்ணாவிரதப் போராட்டமும், கண்டனக் கூட்டமும் நடாத்தப்பட்டுள்ளன.

தென்மராட்சி வர்த்தக சங்கங்களின் ஏற்பாட்டில் முன்னெடுத்துச் செல்லப்படும் இந்த எதிர்ப்பு நடவடிக்கை கொடிகாமம் நகரப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள விசேட பந்தலில் இடம்பெற்றது.

வர்த்தகர்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் என 500இற்கும் அதிகமானோர் இதில் கலந்து கொண்டனர். இதேவேளை, இப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வர்த்தக நிலையங்கள் அனைத்தும் முற்றாக மூடப்பட்டிருந்தது. பொதுச்சந்தைகள் மற்றும் கல்விக்கூடங்கள் எவையும் இயங்கவில்லை. எனினும் போக்குவரத்து செயற்பாடுகள் தடையின்றி இடம்பெற்றன. (27,28,41)

# திருமலை புத்தர்சிலையை அகற்றவேண்டுமென்ற நீதிவான்நீதிமன்றத் தீர்ப்புக்குத் தடை உத்தரவு

## முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கத்தின் மனுவிற்கிணங்க மேன்முறையீட்டு நீதிமன்று பிறப்பிப்பு

(கொழும்பு)

**திருகோணமலையில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத புத்தர்சிலையை அகற்றவேண்டுமென்ற திருமலை நீதிவான்நீதிமன்றத் தீர்ப்புக்கு கொழும்பிலுள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. முச்சக்கரவண்டிச் சாரதிகள் சங்கத்தின் மனுவிற்கு இணங்க இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன் அம்மனுவை விசாரிக்கவும் தீர்மானித்துள்ளது.**

இந்தப் புத்தர்சிலையை அகற்றுமாறு திருகோணமலை நீதிவான்நீதிமன்றத் தீர்ப்பு இதுவரை நாட்களும் உதாசீனப்படுத்தப்பட்டதுடன், இச்சிலைக்கு இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது. இச்சிலை நிறுவப்பட்டமைக்கு எதிராக தமிழ்மக்கள் நடத்திய போராட்டத்தையடுத்து இதனை அகற்றுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுமென சனாதிபதி சந்திரிகாவின் சார்பில் இரு அமைச்சர்கள் உறுதியளித்திருந்தமையும் இது தொடர்பில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திருகோணமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவையினரைச் சந்திக்கவிருந்தமையும் அச்சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டிருந்தமையும் தெரிந்ததே. (12ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா புலனாய்வு அதிகாரி திருமலையில் சுட்டுக்கொலை

(திருமலை)

திருகோணமலை சேருநுவர பகுதியில் வைத்து சிறிலங்கா புலனாய்வுத் துறை அதிகாரி ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று இரவு 7.15 மணியளவில் (12ஆம் பக்கம் பார்க்க)

## கல்லடியில் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடி கடற்கரைக்கு அருகில் புளொட் உறுப்பினர்கள் பயணம் செய்த உழவு இயந்திரம் மீது நேற்று மாலை இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட தாக்குதலில் புளொட் உறுப்பின (12ஆம் பக்கம் பார்க்க)

## கேணல் பானு, இளந்திரையன் நேற்று மட்டக்களப்பு பயணம்

மட்டு- அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு மற்றும் மட்டு- அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்றுக் காலை 8.30 மணியளவில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடன் சிறிலங்கா வான் படையின் உலங்குவானூர்தி மூலம் மட்டக்களப்பு பயணமாகினர்.

இவர்களை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், கட்டளைத் தளபதிகளான கேணல் தீபன், கேணல் ஜெயம், சசிக்குமார் மற்றும் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் எனப் பெருமளவானோர் வழியனுப்பிவைத்தனர்.

## நாட்டை சிக்கலுக்குள் தள்ளிவிட்டு கூட்டமைப்பிலிருந்து வெளியேறியோர் தொடர்ந்து அதிகாரத்தைப்பெற முயற்சி

### எதிர்க்கட்சித் தலைவர் கருத்து

(கொழும்பு)

நாட்டைப் பெரும் சிக்கலுக்குள் தள்ளிவிட்டு கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய தரப்பினர் தொடர்ந்தும் அதிகாரத்தைப்பெறும் முயற்சியில் ஈடுபட்டுவருவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

தெஹியத்த கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறுகையில்,

கடந்த பதின்னான்கு மாத காலப் பகுதியில் அரசாங்கத்திற்கும், அதன் பங்குதாரிகளுக்குமிடையிலான சர்ச்சைகளை மக்கள் முன்கொண்டு வந்து மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டிய பொறுப்பைக் கைவிட்டுள்ளனர். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பும், சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளும் மேலேங்கியுள்ளன.

இந்நிலையில், அவர்கள் தொடர்ந்தும் அதிகாரத்தைத் தக்க வைப்பது குறித்தே பேசுகின்றனர். மக்கள் விடுதலை முன்னணி வெளியேறினால் பரவாயில்லை. நாங்கள் தமிழ்க்கூட்டமைப்புடன் அரசாங்கம் அமைப்போம் எனக் கூறுகின்றார்கள். இதேவேளை,

(12ஆம் பக்கம் பார்க்க)

## "தமிழ்த்தேசியத்தின் குரல்" நாளை எழுச்சி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சுனாமி நிவாரணப் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக பௌத்த பிக்குமார்களும், சிங்கள பேரினவாத அரசியல் தலைவர்களும் மேற்கொண்டுவரும் இனவாத நடவடிக்கைகளைக் கண்டித்து நாளை யாழ்ப்பாணத்தில் "தமிழ் தேசியத்தின் குரல்" என்ற எழுச்சி நிகழ்வு நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள புத்தி ஜீவிகள், மதகுரு மார்கள், சமூகப் பெரியார்கள், மற்றும் அமைப்புகள் (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் யுனிசெப் பணிப்பாளர் இன்று சந்திப்பு

யுனிசெப் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆன் வெனிமன் இன்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடுகிறார்.

யுனிசெப் நிறுவனத்தின் ஓய்வுபெற்ற கறோல் வெனிமினியின் இடத்திற்கு புதிதாக நியமனம் பெற்ற நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆன் வெனிமன் இன்று காலை 9.15 மணியளவில் உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ளார்.

முற்பகல் 10.45 மணியளவில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்து கலந்துரையாடுகின்றார். இச்சந்திப்பு கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

## நாட்டுப்பற்றாளர் சிவகாந்தனின் இறுதி வணக்க நிகழ்வு



(அலுவலக செய்தியாளர்)

சுகவீனம் காரணமாக நேற்று முன்தினம் சாவடைந்த நாட்டுப்பற்றாளர் பொன்னையா சிவகாந்தனின் வணக்க நிகழ்வு கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றது.

பிற்பகல் 2.30 மணியளவில் தூயவன் அரசறிவியல் கல்லூரியில் (12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**Digital Photo Album**
**உருவாக்குபவர்களுக்கு**

எம்மிடம் மேற்படி வேலைக்கான **Frame**, சீனறீஸ், முன்பக்கம் ஆகியன **Photoshop File** ஆக உள்ளன. தொடர்புகளுக்கு நிலவு கணனித் தொழில்நுட்பம், கச்சேரி அருகாமை, கிளிநொச்சி. (சி.12207)

**விசேட ஆங்கில வகுப்புக்கள்**
**GRAMMAR & SPOKEN**

**O/L,A/L** மாணவர்களுக்கும், தொழில் புரிவோருக்கும் காலம்:- புதன்,சனி, ஞாயிறு மாலை 5-6 மணி,இடம்:-அன்னை வேளாங்கன்னி ஆலயம் முன்பாக, உதயநகர் கிழக்கு, ஆசிரியர் **K.YOKAN (BBA &NDE)** (6253)

**தவறிவிட்டது**

வல்வெட்டித்துறை, கம்பர்மலைப் பகுதியில் மு.மதிவாணன் (காங்கேயன்) ஆகிய எனது நாடகுறிப்பேடு தவறவிடப்பட்டுள்ளது. இதனுள் பெறுமதிவாய்ந்த எட்டுப் புகைப் படங்கள் உட்பட ஆவணங்கள் உளளன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தொ.இ.-021-2263432 முகவரி:-டோறா தொலைத்தொடர்பு நிலையம், பருத்தித்துறை வீதி, நெல்லியடி. (சி.12222)

***10 நிமிடத்தில் படங்கள்!!!***

பாஸ்,சகல அடையாள அட்டைப் படங்கள் உடனுக்குடன் வழங்குகின்றோம் டிஜிற்றல் அல்பம் தயாரிப்பவர்கள்:- யாழ் ஒளி,K.S.R PHOTOS இல 05, கனகபுரம்தெரு, கிளிநொச்சி. (6272)


# இரண்டு நாட்கள் மட்டுமே இயங்கிய முல்லை தொலைபேசி சேவை

## -அரச பணிகள் பாதிப்பு

இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினரால் முல்லைத்தீவில் அமைக்கப்பட்ட தொலைபேசி இணைப்புக்கள் தற்சமயம் இயங்காத நிலையில் இருந்து வருகின்றன.

அரச திணைக்களங்களிற்கு முதல் கட்டமாக வழங்கப்பட்ட இத்தொலைபேசி இணைப்புக்கள் இரண்டு நாட்கள் மட்டுமே வேலை செய்ததாகவும் அதன் பின்னர் இன்று வரை தொலைபேசிகள் இயங்கவில்லையெனவும் அரச திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதன்காரணமாக தலைமைக் காரியாலயங்களிலிருந்து தமது வேலைத்திட்டங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியாது இருப்பதாகவும் இதனால் முல்லைத்தீவு மக்கள் பணிகள் பெரும பாதிப்புக்குள்ளாகும் எனவும் சம்பந்தப்பட்ட அரச திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (20)

# மருத்துவ, போக்குவரத்து வசதிகளை சீரமைக்க கோரிக்கை

மன்னார் பெரியமடு ஈச்சிலம்பற்று கிராமமக்கள் போக்குவரத்து மற்றும் மருத்துவ வசதிகள் இன்றி பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

இரவு நேரங்களில் நோயாளர்கள் அவசரசிகிச்சை பெறுவதற்கு வைத்தியசாலைக்குச் செல்வதற்கான வசதிகள் எதுவுமின்றியும் அதேவேளை யானைகளின் தொல்லை அதிகரித்திருப்பதாலும் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். இது தொடர்பாக உரியவர்களிடம் முறையிடப்பட்டு எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்றும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (18)

# தமிழர் புனர்வாழ்வு கழகத்தால் ஒரு இலட்சம் ரூபா நிதி அன்பளிப்பு

மன்னார் மாவட்டத்தின் முசலி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நேற்று புதிதாக ஆரம்பித்து வைக்கப்பெற்ற மன்/சவேரியார்புரம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் ரூபா ஒரு இலட்சம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட பெறுமதிக்கான காசோலையானது மன்னார் மாவட்ட தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவர் மரியநாயகம் குருஸினால் குறிப்பிட்ட பாடசாலையின் அதிபரிடம் நேற்று இடம்பெற்ற பாடசாலைத் திறப்பு விழாவின்போது வழங்கப்பட்டது.

# குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

மன்னாரில் நேற்று தூக்கில் தொங்கிய நிலையில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. 25 வயதான குடும்பஸ்தரின் சடலமே மன்னார் தாராபுரத்தில் மீட்கப்பட்டுள்ளது. இவர் 1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து மன்னாருக்கு வந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஸ்தலத்துக்கு சென்ற பதில் நீதவான் எம்.பி பாரூக் எதிர்வரும் 20 ஆம் திகதி இறந்தவரின் குடும்ப உறுப்பினர்களை மன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.


## மென்பந்து சுற்றுப்போட்டி

**பச்சிலைப்பள்ளி பிரதேச விளையாட்டுத்துறை நடாத்தும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான மென்பந்து சுற்றுப்போட்டி.**

**இதில் கலந்துகொள்ளும் கழகங்கள் தங்கள் பதிவு ...ளை இருபது உறுப்பினர் அடங்கிய விபரத்துடன் ...ள மதுசா குளிரகத்தில் 30.06.2005 இற்கு முன் ...வுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணமாக ...00.00 செலுத்தப்பட வேண்டும்.**

(6281)


## புதிய நிர்வாகிகள் தெரிவு

(முள்ளியவளை)

முல்லை.மேற்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு விசேட கூட்டம் கடந்த 15 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு மேற்படி சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் ஜெயமோகன் தலைமையில் ஆரம்பமானது.

இப்புதிய நிர்வாகத்தில் இ.இருதயநாயகன் தலைவராகவும், மா.பிரபாகரன் உபதலைவராகவும் பி.விஜயச்சந்திரன் செயலாளராகவும் தெரிவாகியதைத் தொடர்ந்து ஒன்பது நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு புதிய நிர்வாக செயலாளரின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவானது. (ஆ)

# கொடுப்பனவை பெறாதோர் பதிவு செய்யக்கோரிக்கை

(அலுவலகசெய்தியாளர்)

சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்து இதுவரை மீளக் குடியமர்வு கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளத் தவறியவர்களுக்கான பதிவுகள் தற்போது மேற்கொள்ளப்பெற்று வருகின்றன.

எனவே மேற்படி கொடுப்பனவுகளைப் பெறத்தவறியவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி முன்பதாக தங்கள் பகுதி கி[illegible] சேவை அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளும் வண்ணம் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் செல்வி.க.சுலோஜினி வேண்டியுள்ளார். (சோ)

# மின்சாரம் தடைப்படும்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சிப் பகுதியில் எதிர்வரும் 19 ஆம் திகதியன்று மின்சாரம் தடைப்படுத்தப்படவுள்ளதென மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர். மின்பிறப்பாக்கியில் பராமரிப்பு திருத்தவேலைகள் நடைபெறவுள்ளதன் காரணமாக அன்றையதினம் அதிகாலை 4.30 மணி தொடக்கம் நண்பகல் 1.00 மணிவரை கிளிநொச்சி நகரப்பகுதியில் மின்சாரம் தடைசெய்யப்படுமென மின்சாரசபையினர் பாவனையாளர்களுக்கு தெரிவித்துள்ளனர். (சோ,கு)


# பணிநிலை வெற்றிடம்

## கணினி இயக்குநர்-305/13

**முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் கணனி இயக்குநர் பதவிக்கான பணிநிலைக்கு தகுதியுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

விண்ணப்பங்கள் யாவும் தலைவர், முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அன்றேல் நேரடியாகவோ 21.06.2005 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் முழு விபரங்களுடன் சுயமாகத் தயாரிக்கப்பட்டு, சான்றிதழ்களின் நிழற்படிகளுடன் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கணனி இயக்குநர் பதவிக்கான விண்ணப்பம் எனக்குறிப்பிடல் வேண்டும்.

01.பதவி:-கணனி இயக்குநர் 305/13

02.வயதெல்லை:-18 தொடக்கம் 45 வரை.

03. சம்பள அளவுத்திட்டம்:-7750/= 75X10-80X10-9300/=

கூட்டுறவு வேலையாள் ஆணைக்குழுவின் சுற்று நிருபத்திற்கு அமைவாக மேலதிக படிகள் வழங்கப்படும்.

04. தகைமைகள்:-க.பொ.த. (உ.த) 3 பாடங்கள் சித்தியுடன் கணனித்துறையில் ஆகக்குறைந்தது MS OFFICE பாட நெறியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மேலும் சுயமாக ஆங்கிலத்தில் கடிதங்களினை தயாரிக்கவும் மொழி பெயர்ப்புச் செய்யவும் ஆற்றலுடையவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிப்பவர்கள் 2005-06-23 ஆம் திகதி நடைபெறும் நேர்முகப்பரீட்சைக்கு மூலப்பிரதிகளுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

*அ.மரியராசா*
*தலைவர்,*
*மு.மா.க.தொ.கூ.ச.சமாசம்,*
*முல்லைத்தீவு*

(சி.12223)

MEDECINS DU MONDE

**MDM** French NGO working on rehabilitation program on Mallavi Hospital is looking for two drivers for the association

-Experience needed in driving and car maintenance
-Familiar with the Vanni and crossing of the border in Vavunia
-Knowledge needed in English or English and Singhalese

Job available immediately, one month trial period followed by a signed contract with monthly salary.
If interested please send contact address along with CV/references to MDM (Medecins dumonde). Mallavi

(5939)

# பின்லேடன், தளபதி முகமது ஓமர் நலமாயுள்ளாரென தலிபான் தளபதி தகவல்

(காபூல்)

**ஒசாமாபின்லேடன், தலிபான் தலைவர் முல்லா முகமது ஓமர் இவ்விருவரும் முழு ஆரோக்கியத்தோடு இருப்பதாக தலிபான் தளபதி ஒருவர் கூறியிருக்கின்றார்.**



சர்வதேச பயங்கரவாதி என வர்ணிக்கப்படும் ஓசாமா பின்லேடன், தலிபான் இயக்கத் தலைவர் முல்லாமுகமது ஓமர் ஆகிய இருவரையும் அமெரிக்க இராணுவம் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தேடிவருகிறது. அவர்கள் தலைமறைவாக இருந்து வருகின்றார்கள். இதற்கிடையில் பின்லேடன் உயிருடன் இல்லை என்றும், அவர் விமானத் தாக்குதலில் படுகாயமடைந்து விட்டார் என்றும் வதந்திகள் பரவின.

இந்த நிலையில் தலிபான் இயக்க மூத்த தளபதிகளுள் ஒருவரான முல்லா அக்தர் உஸ்மானி 'தி நியூஸ்' என்ற ஆங்கிலப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது

"அல்லாவின் கருணையால் பின்லேடன் உயிரோடும், முழு ஆரோக்கியத்தோடும் இருக்கிறார். அவர் எங்கே இருக்கிறார் என்பதை நான் சொல்லமாட்டேன்." என்று கூறினார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் கட்டுப் பாட்டிலுள்ள பகுதியில் தான் பின்லேடன் ஒளிந்திருக்கிறார்.ள என்று கேட்ட போது உஸ்மானி பதில் சொல்ல மறுத்து விட்டார்.

தலிபான் தலைவன் முல்லா முகமது ஓமர் கட்டுப்பாட்டில் தான் இன்னமும் தலிபான் இயக்கம் இருப்பதாகவும் கூறிய உஸ்மானி அவர் எங்கே இருக்கிறார். என்பதைச் சொல்ல மறுத்துவிட்டார்.

"ஓமர் உயிரோடு முழு ஆரோக்கியத்தோடு இருக்கிறார். அவருக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. தினமும் தளபதிகளுக்கு அவர் கட்டளைகள் பிறப்பிக்கிறார்." என்று உஸ்மானி கூறினார்.

## கம்போடியாவில் 30 சிறார்கள் விடுவிப்பு

கம்போடியாவில் சியாம்லீப் என்ற இடத்திலுள்ள சர்வதேசபாடசாலையொன்றில் ஆயுததாரிகளினால் பிடிக்கப் பட்டு பணயக்கைதிகளாக வைக்கப் பட்டிருந்த சுமார் 30 சிறார்கள் விடுவிக் கப்பட்டுள்ளதாக கம்போடியா அரசு கூறியுள்ளது.

பணம், ஆயுதம் மற்றும் தாம் தாய்லாந்திற்கு தப்பிச்செல்ல வாகனம் ஆகியவற்றைக் கேட்ட கடத்தல்காரர்களுடன் பொலிசார் சமரசம் பேசியிருந்தனர். இதன் போது இரண்டு கடத்தல்காரர்கள் கொல்லப்பட்டதாகவும், நான்கு பேர் கைது செய்யப்பட்டதாகவும், பணம் கைப் பற்றப்பட்டதாகவும் இதன் போது கனேடியப் பிரஜையான சிறுவன் ஒருவன் ஆயுதபாணிகளினால் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



கம்போடியாவில் கடத்தல்காரர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட ஒரு பிணைக் கைதி மாணவன்.

## பாகிஸ்தான் ஆயுத வியாபாரி மெக்சிக்கோவில் கைது செய்யப்பட்டார்

(மெக்சிக்கோ)

விமான எதிர்ப்பு ஏவுகணைகளுக்கான பாகங்களை அனுமதிப்பத்திரம் இல்லாமல் ஈரானுக்கு விற்ற பாகிஸ்தானைச் சேர்ந்த ஆரிப் அலி துரானியை அமெரிக்கா தேடிவருகிறது.

இவர் மெக்சிக்கோவுக்கு சட்டத்துக்கு புறம்பாகச் சென்றிருந்தபோது கைதானார். கடலோர நகரமான பிளேயார்ஸ் டிரொச்ரிட்டோவில் உள்ள விடுதியில் இருந்து வெளியே வந்த போது பொலிசார் அவரைக் கைது செய்தனர்.

## அல்ஹைதாவின் முதுகெலும்பை முறித்து விட்டோம் - முஷாரப்

(சிட்னி)

பின்லேடனின் அல்ஹைதா தீவிரவாத இயக் கத்தின் முதுகெலும்பை முறித்து விட்டோம் என்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் செய்துவரும் பாகிஸ்தான் அதிபர் முஷாரப் அங்கு அளித்த பேட்டியில் கூறியதாவது;

பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் முகாமிட்டிருந்த பின்லேடனின் அல்ஹைதா இயக்கத்தினர் மீதும் முல்லா உமரின் தலிபான் படையினர் மீதும் பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல் நடத்தி நிர்மூலமாக்கிவிட்டனர்.

அவர்கள் ஒருங்கிணைந்து செயற்பட முடியாத படி அவர்களது கட்டளை அமைப்பைச் சீர்குலைத்து விட்டோம், குறுக்காகவும், நெடுக்காகவும் அல்ஹைதா இயக்கத்தில் முதுகெலும்பை பாகிஸ்தான் இராணுவம் முறித்து விட்டது. இனி அவர்கள் புத்துயிர் பெற முடியாது எனவும் கூறினார்.



றமாடிப் பள்ளிவாசலில் கூட்டுப் படைகளைச் சந்திப்பதற்கான பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய கூட்டமொன்றிற்கு றமாடிப் பள்ளிவாசல் அதிகாரிகள், தலைவர்கள் திட்டமிட்டிருந்த வேளை அதைத்தடுக்க அல்-கக் இராணுவம் எனத்தம்மைக் கூறும் ஒரு முகமூடியணிந்த துப்பாக்கிதாரிகள் அப்பள்ளி வாசலைச் சுற்றி வளைத்துள்ளதுடன் பிரதான நுழைவாயிலையும் தடை செய்துள்ளனர்.

## அமெரிக்காவில் நேற்று மீண்டும் நிலநடுக்கம் சுனாமிப் பீதியில் மக்கள் சிதறி ஓட்டம்

(லொஸ் ஏஞ்சல்ஸ்)

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நேற்று மீண்டும் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் வடக்குப் பகுதியில் கடந்த 15 ஆம் திகதி காலையில் பயங்கர நில நடுக்கம் ஏற்பட்டது. .இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 7.2 புள்ளிகயாகப் பதிவானது.

இந்த நிலநடுக்கம் காரணமாக சுனாமிப் பேரலைகள் எழக்கூடும் என்று புவியியல் துறை எச்சரிக்கை விடுத்தது. இதனால் பரபரப்பு ஏற்பட்டதுடன் கடற்கரையோரப் பகுதிகளில் உள்ளவர்கள் பாதுகாப்பான இடம் தேடி ஓடினார்கள். ஆனால் சிறிது நேரத்தில் சுனாமி எச்சரிக்கை வாபஸ் பெறப்பட்டது.

இந்த நிலையில் கலிபோர்னியாவில் நேற்றுக்காலை மீண்டும் நில நடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.3 புள்ளியாகப் பதிவானது. லொஸ் ஏஞ்சல்ஸ் நகருக்கு 126 கிலோ மீற்றர் கிழக்கே யுகைப்பாவில் இந்த நில நடுக்கம் மையம் கொண்டிருந்தது.

நில நடுக்கத்தில் கட்டடங்கள் இலேசாக அதிர்ந்தன. வீட்டு யன்னல் கண்ணாடிகள் உடைந்து நொருங்கி விழுந்தன. சுனாமிப் பேரலைகள் எழக்கூடும் என்ற அச்சத்தில் பொது மக்கள் வீடுகளை விட்டுப் பாதுகாப்பான இடம் தேடி ஓடினார்கள். கடந்த இரண்டு நாட்களில் இரண்டு தடவை நில நடுக்கம் ஏற்பட்டது. இது அமெரிக்க மக்களை பீதியில் ஆழ்த்தியுள்ளது.



பக்தாத்தின் மேற்கே றமாடி நகரில் பல தெருக்கள் சந்திக்கும் சந்திப் பகுதியில் ஈராக்கியத் தீவிரவாதிகள் நிலையெடுத்து நிற்கின்றனர். நேற்று முன்தினம் தீவிரவாதிகளின் தாக்குதலில் ஒரு கடற்படைக் 'கிம்வீ' கப்பல் சிப்பந்தி உட்பட ஐந்து ஈராக் கடற்படையினர் கொல்லப்பட்டனர்.



பாக்தாத்தில் அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட விருதுவழங்கல் வைபவத்தில் 617 ஆவது இராணுவப் பொலிஸ் அதிகாரி லைபான் கெஸ்ரர் தனது வெள் ளிப் பதக்கத்தைப் பெறுவதற்கு முன் தயார் நிலையில் நிற்கின்றார்.

## இருவிமானங்களின் மோதல் தவிர்க்கப்பட்டது பாக்.வானவெளியில் 226 பயணிகள் உயிர்தப்பியது

(கராச்சி)

பாகிஸ்தானின் வானவெளியில் இருவிமானங்களின் மோதல் தவிர்க்கப்பட்டதால் 226 பேர் உயிர்தப்பினர்.

பாகிஸ்தானில் உள்ள கராச்சி நகரிலிருந்து போயிங் விமானம் ஒன்று மான்செஸ்டர் நகருக்கு நேற்று முன்தினம் புறப்பட்டுச் சென்றது. அதில் 51 பயணிகளும், 15 ஊழியர்களும் இருந்தனர். அதே நேரத்தில் கராச்சி நகரை நோக்கி 153 பயணிகள் ஏழு ஊழியர்களுடன் மற்றொரு பயணிகள் விமானம் எதிர்பாராதபடி வந்தது. கராச்சிக்கு வடக்கே 265 கி.மீ தொலைவில் உள்ள நவாப்ஷா நகரின் மேலே 36,500 அடி உயரத்தில் இந்த விமானங்கள் சந்தித்துக்கொண்டன. விபரீதம் நடக்கப்போவதை அறிந்த விமானநிலைய கட்டுப்பாட்டு அதிகாரிகள் உடனே விமானங்களில் ஒன்றை மேலே ஏறிப் பறக்குமாறும், மற்றொரு விமானத்தை கீழே இறங்கி தாழ்வாகப் பறக்குமாறும் உத்தரவு பிறப்பித்தனர். இதனால் விமான விபத்து மற்றும் பெரும் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது. இரண்டு விமானங்களையும் கவனக்குறைவாக ஒரே பாதையில் வர அனுமதித்த ஊழியர் மீது நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது. பாகிஸ்தானில் இதுபோல விமான விபத்து தவிர்க்கப்படுவது கடந்த ஆறு மாதத்தில் இது இரண்டாவது முறையாகும்..

## அமெரிக்க இராணுவ விமானமொன்று குடியிருப்பில் வீழ்ந்து நொருங்கியது

(லொஸ்ஏஞ்சல்ஸ்)

அமெரிக்காவில் அரிசோனா மாநிலத்தின் யுமா நகரில் குடியிருப்புகள் நிறைந்த பகுதியில் ஒரு இராணுவ விமானம் விழுந்து நொருங்கியுள்ளது.

விமானம் விழுந்ததும் உடனடியாக அந்தப் பகுதியில் வசித்த மக்கள் அனைவரும் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் உயிர்ச்சேதம் எதுவும் உண்டா என்பது தெரியவில்லை.

# ஈழத்தமிழரின் விடுதலைப்போருக்கெதிராக இந்தியா செயற்படக்கூடாது

## -திருமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை கோரிக்கை

(திருமலை)

**ஏழு கோடி மக்களின் உணர்வுகளுக்கு எதிராகவும், ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்துக்கு எதிராகவும் இந்தியா செயற்படக்கூடாது என்று திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை இந்திய அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளது.**

சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட நாளிலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் இலங்கையில் ஒரு நிரந்தர சமாதானம் ஏற்பட்டு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நீதியானதும், நியாயமானதும் தீர்வொன்றினைப்பெற்றுத்தருவதற்கு இந்திய அரசாங்கம் உதவ வேண்டும் என்று பல தடவைகள் கேட்டுக்கொண்டனர். நடு நிலை யாளராகவோ, ஏற்பட்டாளராக பங் காற்றுமாறு கேட்டுக்கொண்டபோதெல்லாம் அதனைத் தட்டிக் கழித்த இந்தியஅரசு இன்று தனது பொருளாதார நலன் மற்றும் இராணுவ நலன் கருதி பாதுகாப்பு ஒப்பந்தம் என்ற பெயரிலும், எண் ணெய் ஒப்பந்தம் என்ற பெயரிலும் சிறிலங்கா தேசத்துக்குள் நுழைய முற்பட்டுள்ளன என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய தேசம் தனது நலனை பாதுகாத்துக்கொள்வது அவர்கள் பிரச்சினை. ஆனால் தங்கள் நலனுக்காக தமிழ் மக்களது விடுதலைப்போராட்டத்திற்கு எதிராக செயற்படுவதனை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. .தமிழ் மக்களது நியாயமான போராட்டத்துக்கு நியாயமான ஒரு தீர்வு கிடைப்பதற்கு சிறிலங்கா அரசுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும். இதற்காக இந்தியா தனது ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கவேண்டும் என்றும் அறிக்கையில் பேரவை தெரிவித்துள்ளது.

# உறவினரிடையே மோதல் மூவருக்கு வாள் வெட்டு

(அலுலவக செய்தியாளர்)

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் உறவினர்களிடையே ஏற்பட்ட மோதலில் மூவர் வாள்வெட்டுக்கு இலக்காகியதுடன் ஐவர் அடிகாயங்களுக்கும் உள்ளாகி உள்ளனர்.

இச்சம்பவமானது கடந்த திங்களன்று 7.00 மணியளவில் எள்ளுக்காட்டுப்பகுதியில் நடைபெற்றுள்ளது. இதன்போது இ.றிசாமி (வயது 27), றே.சிவபால சூரியன் (வயது 28) மற்றும் வேலு நடராசா (வயது 66) ஆகியோர் வாள்வெட்டுக்காயங்களுக்கு இலக்காகியுள்ளனர். அதேவேளை நாகம்மா (வயது 85), வெள்ளிமலர் (வயது 27) செல்வி (வயது 18), ராஜேஸ்வரி (வயது 41), வி.சதீஸ்வரன் (வயது 20) ஆகியோர் அடிகாயங்களுக்கும் உள்ளாக்கப்பட்டு அனைவரும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுள்ளனர். (கு)

## நாடகப்போட்டி

(முல்லைத்தீவு)

உலக அகதிகள் தினத்தை முன்னிட்டு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனமும், முல்லைத்தீவு கல்வி வலயப்பணி மனையும் இணைந்து முல்லை மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான நாடகப்போட்டி ஒன்றினை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளன.

மேற்படி போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் எதிர் வரும் திங்கட்கிழமை புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணியம் பாடசாலையில் பி.ப.3.00 மணியளவில் ஆரம்பமாகும் என்பதை நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் அறியப்படுத்தியுள்ளார்கள். (தீ)


# மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும் வீரமுரசு கலை நிகழ்வும்

முழங்காவில் பிரதேச மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும், வீரமுரசு கலை நிகழ்வும் கடந்த புதன்கிழமை முழங்காவில் பிரதேசத்தில் இடம் பெற்றது.

மாலை 5.00 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் பொதுச்சுடரினை மன்னார் மாவட்ட கடற்புலிகளின் துணைப்பொறுப்பாளர் அன்பு, முழங்காவில் காவல்துறைப் பகுதிப்பொறுப்பாளர் யோகேஸ், கிளி.மாவட்ட புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் பூங்குன்றன் மாஸ்ரர் ஆகியோர் ஏற்றி வைக்க தமிழீழ ஊரக வளர்ச்சிப்பொறுப்பாளர் கந்தன் தேசியக்கொடியினை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து மாவீரர் பொதுப் படத்திற்கு, முழங்காவில் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழரசன் ஈகச்சுடரேற்றி மலர் மாலையினை அணிவித்தார். அதனை அடுத்து மாவீரர்களின் திருவுருவப்படங்களிற்கான ஈகச்சுடரினை அவர்களது பெற்றோர்கள் ஏற்றி மலர்மாலைகளை அணிவித்தனர்.

இந்நிகழ்வில் இரவு நிகழ்ச்சியாக இரணைமாதா நகர் சொக்கலிங்கம் சிறுவர் பூங்கா மாணவர்களினதும், முழங்காவில் ம.வி. மாணவர்களினதும் கலை நிகழ்ச்சிகள் மகளிர் கலை பண்பாட்டு குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இதேவேளை - பளைப்பிரதேச மாவீரர் பெற்றோர் கௌவிப்பு நிகழ்வும் வீரமுரசு கலை நிகழ்வும் பளைப் பிரதேசத்தில் இன்று மாலை 5.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.



கிளிநொச்சி நகர கிராம சேவை அலுவலராக 15 வருடங்களாக கடமை புரிந்து மாற்றலாகி சென்றுள்ள கிராம சேவை அலுவலர் எஸ்.செல்வரட்ணம் அவர்களுக்கு கிளிநொச்சி மக்களால் கலாச்சார மண்டபத்தில் சேவை நலன் பாராட்டு இடம் பெற்றமையினை படத்தில் காணலாம்.

(படம்:- சோதி)

# இந்து ஆலயங்கள் ஒன்றியத்தின் பொதுக்கூட்டமும் சமகால அரசியல் கருத்தரங்கும்

(துணுக்காய்)

துணுக்காய் பிரதேச இந்து ஆலயங்கள் ஒன்றியத்தின் பொதுக்கூட்டமும் சமகால அரசியல் கருத்தரங்கும் துணுக்காய் பிரதேச அரசியல்துறை ஒன்று கூடல் மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றுள்ளது.

பிற்பகல் 3.00 மணியளவில் இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் வே.சிறிஸ்கந்தராசா தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் முல்லை.மாவட்ட அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் கா.செல்வன் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில்

தென்னிலங்கையில் சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழருக்கெதிரான உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கும் இவ்வேளையில் இந்து சமயம் சார்ந்த ஒன்றியத்தினர், ஆகிய நாமும் எமது மக்களுக்காக குரல் கொடுக்கவேண்டிய காலம் வந்துவிட்டது என்றும் இதற்கு இந்து ஆலயங்கள் ஒன்றிணைந்து அதற்கெதிராக குரல் கொடுக்கவேண்டுமென்றும் தெரிவித்தார்.

அத்துடன் துணுக்காய் பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் புனிதனும் சமகால அரசியல் தொடர்பான கருத்துக்களை வழங்கினார். மேலும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட பிரதேச தொழிற்சங்க பொறுப்பாளர் கருத்துத்தெரிவிக்கையில் இச்சமாதான சூழ் நிலையில் இந்து ஆலய நிர்வாகங்கள் விழிப்புடன் இருந்து சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கெதிராக செயற்பட வேண்டுமெனவும் தெரிவித்தார். (24)

## பெற்றுக்கொள்ளவும்

(அலுவலக செய்தியாளர்)

மாங்குளம் பனிக்கன்குளம் கிராமத்தைச்சேர்ந்த சங்கிலி சுதாகரன் என்பவரது தேசிய அடையாள அட்டை இலக்கம் 831044527V மற்றும் பயண அனுமதி அட்டை என்பன இயக்கச்சிப்பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப் படைக்கப்பட்டுள்ளது. உரித்துடையவர் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும். (சோ)

* * * *

(அலுவலக செய்தியாளர்)

நெடுங்கேணிப் பகுதியில் கடந்த 13 ஆம் திகதியன்று வல்லிபுரம், கிருபாகரன் என்பவருடைய அடையாள அட்டையும், பயண அனுமதி அட்டையும் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி [illegible]நாதம் பணிமனையில் ஒப்படைக்[illegible]ள்ளது. உரியவர் அலுவலக[illegible] பெற்றுக்கொள்ளவும். (தீ)

# பாண்டிருப்பு அரசியல்துறை அலுவலகம் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

## -போராளிகள் இருவர் காயம்

விடுதலைப்புலிகளின் பாண்டிருப்பு பிரதேச அரசியல்துறை அலுவலகம் மீது நேற்று முன்தினம் நண்பகல் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு போராளிகள் காயமடைந்துள்ளனர்.

மேற்படி அலுவலகத்தில் போராளிகள் மக்கள் சந்திப்பை நடத்திக்கொண்டிருந்த சமயம் அங்கு வந்த இரண்டு நபர்கள் திடீரென கைத்துப்பாக்கி மூலம் இந்த துப்பாக்கிப்பிரயோகத்தைச்செய்துவிட்டுத்தப்பிச்சென்றுள்ளனர்.

காயமடைந்த போராளிகளான நவநீதன் மற்றும் ராஜன் ஆகியோர் கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

அரச படையும், இராணுவப் புலனாய்வுத்துறையினருமே இந்தச் சம்பவத்திற்கு பொறுப்பு என்றும் அரசாங்க கட்டுப்பாட்டுப்பகுதியில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்திற்கான முழுப்பொறுப்பையும் அரசாங்கமே ஏற்கவேண்டும் எனவும்விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைப்போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவினரிடம் இது ஒரு போர்நிறுத்த மீறல் என விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறை முறைப்பாடு செய்துள்ளது.

# தமிழீழ போக்குவரத்துக்கழக பேருந்துப்பகுதி கட்டட திறப்புவிழா

(முல்லைத்தீவு)

தமிழீழ போக்குவரத்துக்கழக முல்லைத்தீவு மாவட்டத்திற்கான பேருந்துப்பகுதியின் கட்டடத்திறப்பு விழா முல்லைத்தீவில் இடம் பெற்றுள்ளது.

கடந்த புதன்கிழமை காலை பத்து மணியளவில் தமிழீழ போக்குவரத்துக்கழக முல்லை மாவட்ட நிர்வாகப்பணிப்பாளர் சி.சிவசோதி தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் மங்கல விளக்கினை கடற்புலிகளின் முல்லை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் ரங்கன், தமிழீழ போக்குவரத்துக்கழக நிதிப் பொறுப்பாளர் மாறன் ஆகியோர் ஏற்றி வைத்தார்கள். தமிழீழ தேசியக்கொடியினை முல்லை. மாவட்ட தமிழீழ போக்குவரத்துக் கழக நிர்வாகப் பொறுப்பாளர் வன்னித் தோழன் ஏற்றினார். பெயர்ப் பலகையினை பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் திரை நீக்கம் செய்து வைத்தார். நிறுவனத்தினை முல்லை.மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் திறந்து வைத்தார். பணிமனைக்கட்டடத்தொகுதியினை முல்லை.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தின் தலைவர் மரியராசா நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

பேணுகைப்பகுதிக்கட்டடத்தினை தமிழீழ பேருந்து உரிமையாளர் கழகப்பொருளாளர் ஜெயவீரசிங்கம் திறந்து வைத்தார். நிகழ்வில் வரவேற்புரையினை தமிழீழ போக்குவரத்துக்கழக ஆளணி முகாமையாளர் கண்ணன் நிகழ்த்தினார்.

சிறப்புரைகளை அரச அதிபர் இமெல்டா சுகுமார், பாராளுமன்ற உறுப்பினார் கனகரத்தினம், இலங்கை போக்குவரத்து சபையின் இளைப்பாறிய அதிபர் தவராசா ஆகியோர் நிகழ்த்தினர். நன்றியுரையினை முல்லை .மாவட்ட பேருந்துப்பகுதி முகாமையாளர் சிதம்பரநாதன் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் தமிழீழ போக்குவரத்துப்பணியாளர்கள், பொறுப்பாளர்கள், முல்லை மக்கள், அரச அரச சார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (20)

# பதியப்பட்ட 29 உந்துருளிகளின் இலக்கங்கள் இரத்துச்செய்யப்பட்டுள்ளன

## மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் 29,30.04.2005 ஆகிய திகதிகளில் நடைபெற்ற நடமாடும் சேவையின் போது பதிவு செய்யப்பட்ட 29 உந்துருளிகள் இரண்டாம் தடவை பதிவு செய்யப்பட்டவை எனவும் அதனால் அவற்றின் 502 இலக்கத்தின் கீழ் பதியப்பட்ட 29 இலக்கங்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் முன்னைய இலக்கத்தின் கீழ் புதிய விண்ணப்பத்துடன் ஏனைய ஆவணங்களும், விபரமான சத்தியக்கடதாசியும் இணைத்து உரிய மாற்றம் செய்யும் படியும் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலதிக விபரங்களுக்கு கிளிநொச்சி மாவட்ட செயலக மோட்டார் வாகன கிளையுடன் தொடர்பு கொள்ளும்படி கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம் வேண்டியுள்ளார். (சோ)

# எங்கள் நிலத்தில், எங்கள் பலத்தில்; சுயநிர்ணய உரிமையுடன் நிற்க வேண்டும்

## -யாழ். மக்களிடம் நடாத்தப்பட்ட ஆய்வில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**எங்கள் நிலத்தில், எங்கள் பலத்தில், எங்கள் சுயத்தில் சுயநிர்ணய உரிமையுடன் நிலைத்து நிற்கவே நாம் விரும்புகின்றோம் என யாழ் குடாநாட்டில் மக்கள் மத்தியில் நடத்தப்பட்ட ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

"சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளின் இனவாத நடவடிக்கைகள்" தொடர்பாக மனித உரிமை அமைப்பினால் யாழ் குடாநாட்டு மக்களிடையே நடத்தப்பட்ட ஆய்வில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாக மனித நேய அமைப்புக்களின்ஒன்றிய தலைவர் சு.பரமநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: தென்பகுதியில் இதுவரை தமிழரை மதிக்கக்கூடிய அரசியல் , கலாச்சாரத்தையோ தலைமைத்துவத்தையோ காணவில்லை ஐம்பது வருட காலத்திற்கு மேலாக மாறி மாறி வந்த அரசுகள் இந்த விடயத்தில் ஒருமித்த நிலையினையே கடைப்பிடித்துள்ளன. அன்று தொட்டு இன்று வரை தமிழர்தரப்பில் சுயநிர்ணய உரிமை பற்றியே பேசப்பட்டு வந்தது. அதேபோல் அன்று தொட்டு சிங்கள பௌத்த மிதவாத சக்திகளும் பௌத்த பிக்குகளும் தொடர்ந்து தமிழரை உதாசீனம் செய்தே வருகின்றன.

நாம் சிங்கள மொழியையோ பௌத்த மதத்தையோ எதிர்க்கவும் இல்லை வெறுக்கவும் இல்லை ஆனால் அவை இரண்டையும் வைத்து எம்மை அடக்கி ஒடுக்க முனைவதையே எதிர்க்கின்றோம்.

கடந்த காலங்களில் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள சிங்கள பௌத்த மிதவாதப்போக்கு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

எங்கள் நிலத்தில் எங்கள் பலத்தில் எங்கள் சுயத்தில் சுயநிர்ணய உரிமையுடன் நிலைத்து நிற்கவே நாம் விரும்புகின்றோம். எங்கள் சமூகத்தில் நாங்கள் மதிக்கும் பெரியோர்களிடம் எமது இந்த கருத்தை தெரிவித்துஅவர்களின் ஆலோசனைப் படி செயற்பட விரும்புகிறோம். என மக்கள் மத்தியில் இருந்து கருத்துக்கள் வந்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (சு)

## குடாநாட்டில் காணிப்பிரச்சினையைத் தீர்க்க விசேட செயலணிக்குழு அமைக்கப்பட்டது

### -யாழ்.அரசஅதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நிலவிவரும் காணிப்பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கென விசேட செயலணிக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் உள்ள அரச மற்றும், பொதுக்காணிகளை சுவீகரித்து குடியமர காணிகள் இல்லாத பொதுமக்களுக்குக்கொடுத்தல், குத்தகைக் காணிகளுக்கான சட்ட ஆவணங்களை பெற்றுக்கொடுத்தல்,மற்றும் காணி உறுதிகளை புதுப்பித்தல் பிரதியெடுத்தல் போன்ற நடவடிக்கைகளைக் கையாள்வதற்காக இக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் அமுல்படுத்தப்படும் வீட்டுத்திட்டங்களுக்குப் பயனாளிகளை தெரிவு செய்யும் போது காணிகள் இல்லாமை மற்றும் காணிகள் இருந்தும் அவற்றிற்கான சட்டபூர்வ ஆவணங்கள் இல்லாமை போன்ற பிரச்சினைகளால் பயனாளிகள் தெரிதலில் ஏற்படும் சிக்கல்களை போக்கும் நோக்குடனேயே இது அமைக்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் மேலும் அறிவித்துள்ளார். (33)

## தென்மராட்சி அழகக சங்க புதிய கட்டடத் திறப்பு விழா

தென்மராட்சி அழகக சங்கக் கூட்டமும்எதிர்கால வளர்ச்சி தொடர்பான கலந்துரையாடலும் புதிய கட்டட திறப்பு விழாவும் மீசாலை புதுச்சந்தை அழகக சங்க அலுவலகத்தில் தலைவர், சி.கணேஷரட்ணம் தலைமையில் நடைபெற்றது.



இக் கூட்டத்தில் தென்மராட்சி பிரதேசத்திலுள்ள எண்பதிற்கும் அதிகமான அழகக நிலைய உரிமையாளர்கள் கலந்து கொண்டதுடன் சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ்,அரசியல்துறை கோட்டப் பொறுப்பாளர் ஈஸ்வரன், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் விக்கி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தென்மராட்சி அழகக சங்கத்தின்பெயர்ப் பலகையினை பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ்திரை நீக்கம் செய்துவைத்தார். (28)

## இளைஞர் ,யுவதிகளுக்கு கட்டட நிர்மாணம் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இளைஞர் யுவதிகளுக்கான கட்டடநிர்மாண தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்கவுள்ளதாக உலக வங்கியின் வடக்குகிழக்கு மாகாண வீடமைப்புத் திட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ்பயிற்சி பெறும் ஒருவருக்கு நாளொன்றுக்கு250 ரூபா ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதன்படி பயிற்சி பெற விரும்புவோர் உலகவங்கியின் வடக்கு கிழக்கு மாகாண வீடமைப்பு திட்டத்தின் யாழ்.செயலக கிளையுடன் தொடர்புகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

மேசன்பயிற் மற்றும் தச்சு வேலை பயிற்சி ன்பன இதில் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## வீடமைப்புத்திட்ட கொடுப்பனவு யாழ். செயலகத்தில் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் வடக்கு கிழக்கு மாகாண வீடமைப்புத் திட்டத்தின்கீழ் 1000 பயனாளிகளுக்குவீட்டு நிர்மாணப் பணிகளுக்கான முதற்கட்ட கொடுப் பனவுகள் நேற்று முன்தினம் வைபவ ரீதியாக வழங்கப்பட்டன.

இக் கொடுப்பனவு வழங்கும் வைபவம் யாழ்.அரசசெயலக மண்டபத்தில் அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்றது.




இதில் கலந்து கொண்ட தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா, சிவநேசன் சிவாஜிலிங்கம், பத்மினி சிதம் பரநாதன்,சுரேஸ்பிரேமச்சந்திரன், ஈழவேந்தன்மற்றும் இவ் வீடமைப்புத் திட்டத்தின் பணிப்பாளர் செ.பத்மநாதன் ஆகியோர் முதற்கட்டக் கொடுப்பனவான 50 ஆயிரம் ரூபாவுக்கான காசோலைகளை பயனாளிகளுக்கு வழங்கினர்.

இதன் முடிவில் உலக வங்கி அதிகாரிகளால் இவ் வீடமைப்புத் திட்டம் பற்றிய கருத்தரங்கு ஒன்றும் பயனாளிகளுக்கு நடத்தப்பட்டது.(33)

### -யாழ் மாவட்ட பிரதேச சபைகளில்-

## வாகனங்களுக்குப் பற்றாக்குறை ; செயற்பாடுகள் பெரும் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகளின் பாவனைக்கான வாகனங்கள் பற்றாக்குறையாக காணப்படுவதாக பிரதேச சபைகளின் செயலாளர்கள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி.இராசையாவிடமும் யாழ்மாவட்டஅரசாங்க அதிபர் கேகணேஷிடமும் முறையிட்டுள்ளனர்.

பிரதேசசபைகளால்மேற்கொள்ளப்பட்டுவரும் உள்ளூர் அபிவிருத்தித் திட்டங்களைக் கண்காணிக்கவும் மேற்பார்வை செய்யவும் மற்றும் வெளிக்களப் பணிகளை மேற்கொள்ளவும். பிரதேச சபைகளின் அதிகாரிகளுக்கு போக்குவரத்து வாகனங்கள்அவசியதேவையாக காணப்படுகின்றது.

எனினும் யாழ். மாவட்டத்திலுள்ள பல பிரதேச சபைகளில் நிலவும் வாகனப் பற்றாக்குறையால் தம்மால் மேற்கொள்ளப்படும் வெளிக்களப் பணிகளும் உள்ளூர் அபிவிருத்தி நடவடிக்கைகளும் பாதிக்கப் பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியே இம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதே வேளை யாழ். மாவட்டத்தின் பலபிரதேசசபைகளது வாகனங்களை ஈ.பி.டி.பி.யினர் கையகப்படுத்தி வைத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (33)

## ஆங்கில பாடம் கற்பிக்க ஆசிரியர் பற்றாக்குறை

(அலுவலக செய்தியாளர்)

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி ஆங்கிலப் பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது. நீண்ட காலமாக சில பாடசாலைகளில் ஆங்கிலப் பாட ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை.

இது தொடர்பாக மாகாண கல்வி அமைச்சுக்கு தெரிவிக்கப்பட்ட போதும் இது வரை எதுவித நடவடிக்கைக்களும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வலய பாடசாலைகளில் ஆங்கிலப் பாடஆசிரியர்கள் பற்றாக்குறை தொடர்ந்து நிலவி வருவதால் இப்பாடத்திற்கான பெறுபேறுகள் வீழ்ச்சியடைந்து செல்கின்றன. (சு)

## உற்சவத்திற்கான பேருந்து சேவை


நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலய விசேட உற்சவ தினங்களையொட்டி இம்மாதம் 20 ஆம் திகதியிலிருந்து 24ஆம் திகதிவரை யாழ்.பஸ்நிலையத்திலிருந்து 15 நிமிடத்திற்கு ஒரு பேருந்தை விசேட சேவையாக நடத்துவதற்கு வட பிராந்திய போக்குவரத்துச்சபை ஒழுங்கு செய்துள்ளது.

## உலருணவு விநியோக வழங்கற் கட்டளை

(யாழ்ப்பாணம்)

யாழ.மாவட்டப.நோ.கூ. சங்கங்கள் பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான உலருணவு விநியோகத்திற்கான வழங்கற்கட்டளைகளை யாழ். மாவட்டச் செயலக புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலகத்தில் பெற்று 22 ஆம்திகதி ஒரே தட வையில் மேற்படி இருமாதங் களுக்கும் விநியோக நடவடிக் கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்டச் செயலக உதவித்திட்ட பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# எரித்திரியா






எரித்திரியா விடுதலை அமைப்பின் பெண்போராளிகள்

நாடு- எரித்திரியா
சனத்தொகை-3,467,087(யூலை-1993)
பரப்பளவு-121,320 ச.கிலோமீற்றர்
மொழி -ஆங்கிலம்
சமயம்-கிறிஸ்தவம்,இஸ்லாம்,
அனிமிஸ்ட்



எரித்திரியா விடுதலை அடைந்த போது அரசின் செயலாளராக இருந்த இசையாஸ் அவ்வேர்கி அவர்கள்.

1889- இத்தாலியின் காலனித்துவத்தின் கீழ் எரித்திரியா.
1941- உலகப்போர் -2, ஆபிரிக்காவில் இத்தாலியை தோற்கடித்தல்
1952- எத்தியோப்பியாவுடன் கூட்டு சேர்ந்தது எரித்திரியா.
1961- எரித்திரியா விடுதலை முன்னணியால் சுதந்திரப்போர் ஆரம்பம்.
1962- எரித்திரியா 14 ஆவது மாகாணமாக எத்தியோப்பியாவுடன் சேர்ந்தது.
1970- எரித்திரியா மக்கள் விடுதலை முன்னணி (ஈ.பி.எல்.எவ்) உருவாக்கம்.
1976-8 விடுதலை அமைப்பு அதிகமாக நகரங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.
1991- எத்தியோப்பாவிடம் இருந்து எரித்திரியா விடுதலை அடைந்தது.
1993- மே -24 எரித்தியாவின் தேசிய தினம்.

*ஆபிரிக்காவின் நீண்ட காலயுத்தத்தில் எரித்திரியா பல தாங்கொணாக் கொடுமைகளைச்சந்தித்துள்ளது. எரித்திரியாவுக்கும் எத்தியோப்பியாவுக்கும் இடையிலேயே இந்த யுத்தம் நடைபெற்றது. எனினும் 30 வருட யுத்தத்தின் பலாபலன் எரித்திரியாவின் விடாமுயற்சியால் அந்நாட்டு மக்கள் விடுதலை அடைந்தார்கள். இந்த நாட்டின் சுதந்திரத்திற்காக 60 ஆயிரம் வீரர்கள் தங்கள் உயிரை நாட்டுக்காக துறந்துள்ளார்கள். 40 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 1987-89 காலப்பகுதியில் யுத்தத்தின் கொடூரத்தால் ஏற்பட்ட பஞ்சம் அந்நாட்டு மக்களை அயல் நாடுகளுக்கு செல்ல நிர்ப்பந்தித்துவிட்டது. அயலில் உள்ள நாடான சூடானுக்கு இரண்டு இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து சென்றனர். அவர்களும் மற்றும் வேறு ஆபிரிக்க நாடுகளில் தஞ்சம் புகுந்த எரித்திரிய மக்களும்1991 ஆம் ஆண்டில் சுதந்திரமடைந்ததன் பின் தங்கள் நாட்டுக்கு திரும்பி வந்துள்ளனர்.*

தொகுப்பு -கா.சுரேன்

# பனியில் விளையாட



பனியில் ஓடக்கூடிய ஸ்னோமோட்டோ (Snowmoto) ஒன்று தற்பொழுது புழக்கத்திற்கு வந்துவிட்டது. இந்த வகையான பனி மோட்டார் சைக்கிள் இலகுவாக திருப்பக்கூடியதும் வயது வந்தவர்கள் இலகுவாகக் ஓடக்கூடியதாகவும் நீண்ட கால பாவனை கொண்டதாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது.


# பல வசதிகளுடன்...



புதிய புதிய வடிவங்களில் வோக்மன்கள் வந்தாலும் அதை எம்மவர்கள் வாங்கிப்பார்த்தே தீருவார்கள். இதுவும் ஒரு புது விதமான வோக்மன் தான்.

இதில் இணையத்தில் இருந்து பாட்டுக்கேட்டல் FM றேடியோ, மற்றும் 2.மெகாபிக்சல் கமரா, மற்றும் திரைப்படங்களையும் பார்க்கக்கூடிய வசதிகளையும் இது கொண்டுள்ளது. W31S,au என்ற பெயரைக்கொண்ட இந்த வோக்மன் மிக அண்மையில் ஜப்பானில் வெளிவந்துள்ளது.

# கொண்டு செல்லுங்கள்..!




நீங்கள் தற்செயலாக வேறு இடத்திற்கு உங்கள் **laptop** கணனியை கொண்டு சென்றவுடன் விண்டோஸ் அழிந்து விட்டதா...

கவலைவேண்டாம் தற்பொழுது Windows XP- USB flash drive இல் வந்துவிட்டது. பிறகென்ன கையோடு அதனையும் கொண்டு செல்லுங்கள்.

# நெற்பயிரைத் தாக்கும் இலைச்சுருட்டிப்புழு

**தாக்கத்தை அடையாளம் காணல்:-**

01. நெற்பயிரின் இலைகள் மடிக்கப்பட்டு இருப்பதை அவதானிக்கலாம்.
02.மடிக்கப்பட்ட இலைகளைப்பிரித்துப் பார்த்தால் இளம் மஞ்சளும் பச்சையும் கலந்த நிறப்புழுக்களைக் காணமுடியும்.
03.புழுக்களின் தாக்கத்தினால் நெற்பயிரின் இலைகள் வெள்ளை நிறமாகக் காணப்படும்.




**நிறையுடலி (தாய்ப்பூச்சி)**

தாய்ப்பூச்சி சிறியதாக பழுப்பு நிறத்தில் இருக்கும் இறகு அகலம் 15 மில்லிமீற்றர் ஆகும். இறகின் வெளிவிளிம்பு சாம்பல் நிறப்பட்டியைக் கொண்டிருப்பதுடன் குறுக்காக சாம்பல் நிறக் கோடுகளையும் கொண்டிருக்கும்.

**முட்டை:-**

நிறையுடலிப்பெண் அந்துப்பூச்சிகள் ஒரு தடவையில் 300 வரையான முட்டைகளை இட்டும். இவை இலையின் மேற்பரப்பில் கூட்டமாக இருக்கும், முட்டைகள் 03-05 நாட்களில் பொரித்து குடம்பிகள் (புழுப்பருவம்) வெளிவரும்.

**குடம்பி புழுப்பருவம்:-**

இளம் மஞ்சளும் பச்சையும் கலந்த நிறம். குடம்பிகள் இலைகளை மடித்து அதனுள்ளிருந்து இலையின் பச்சைப் பகுதிகளை உண்டு 03 கிழமைகளில் முழு வளர்ச்சியடையும்.முதிர்க்குடம்பி 16.5 மில்லி மீற்றர் நீளம் ஆகும்.

**கூட்டுப்புழு:-**

நெற்பயிரின் மடிக்கப்பட்ட இலைகளினுள்ளேயே கூட்டுப்புழுப்பருவம் காணப்படுகின்றது. கூட்டுப்புழு விலிருந்து 08 நாட்கள் கழித்து தாய்ப்பூச்சி வெளிவரும்.

## கட்டுப்படுத்தல்

**இரசாயனக் கட்டுப்பாட்டுமுறை:-**

பின்வரும் பூச்சிநாசினிகளில் ஏதாவது ஒன்றை சிபார்சின்படி விசிறவும்.

1.குளோர்பைரி பொஸ் 200 கி.லீ செ.கு
2.குளோர்பைரி பொஸ் 400 கி.லீ.செ.கு
3.பென்தியோன் 500 கி.லீ.செ.கு
4.டெபியுபெனோசைட்.

**இரசாயனமற்றமுறை:-**

1.வயல், வரம்புகளில் களைகளை முற்றாகக்கட்டுப்படுத்த வேண்டும். இக்களைகளில்பெரும்பாலான தாய்ப்பூச்சிகள் முட்டையிடுகின்றன.
2.விளக்குப் பொறிகளை வைத்து தாய் அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.
3.3% வேப்பெண்ணெய் கரைசலையும் 05 லீட்டர் மண்ணெய்யும் கலந்துதெளிக்கலாம்.


நா. குகானந்தன்,
விவசாயப்போதனாசிரியர்,
ஒட்டுசுட்டான்.

# ஏ.என்.கே.எஸ்1-வெள்ளை நிற எள்ளு வர்க்கம்

அங்குனுகொல பொலஸ்ஸவில் அமைந்துள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்ட எள்ளுவர்க்கம் ஆகும்.

இதன் விதைகள் வெள்ளை நிறமுடையவை. இதன் வயது 70–75 நாட்களாகும். எம்.ஐ.1, எம்.ஐ.2 ஆகிய வர்க்கங்களை விட கூடிய விளைச்சலைத் தரக் கூடியது. குறைந்த வயதுடையதாகவும், வரட்சியில் இருந்து தப்பி வளரக் கூடியதாகவுமிருப்பதால் சிறுபோகத்தில் மானாவாரிச் செய்கைக்கு மிக உகந்ததாகும்.

# மீடியா றெக்கோடர்...



முற்றுமுழுதாக ஜப்பான் தொழில்நுட்பத்தில் உருவான இந்த றெக்கோடர் கையடக்கமானதும் பதியும் குரல்களை மிகத்தெளிவாகவும் கேட்கமுடியும்.

இந்த றெக்கோடருக்கு மீடியா றெக்கோடர் **Media recoder** என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

இதனுள் **memory card** டே பயன்படுத்த முடியும். இதனை பின் கணனியில் பொருத்தி தகவல்களை வெளியில் எடுக்கலாம்.

# எயிட்ஸ் பரவாமல் தடுக்கும் சக்தி தேங்காய் எண்ணெய்க்கு உண்டு?

தேங்காய் எண்ணெய் மனித உடலில் எயிட்ஸ் கிருமி பரவவிடாமல் தடுக்கும் சக்தி கொண்டது என்று ஜகார்த்தாவில் உள்ள ஆசியா-பசுபிக் தேங்காய் ஆய்வுநிலைய இயக்குனர் டாக்டர் பி.ரத்தினம் கொச்சியில் நடக்கும் சர்வதேச பொருட்காட்சியில் தெரிவித்துள்ளார்.

தேங்காய் எண்ணெய்யில் உள்ள 'லவுரிக்'அமிலம் எயிட்ஸ் கிருமியை அழிக்கும் சக்தி கொண்டது என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது பற்றி அமெரிக்காவின் விஞ்ஞானி டாக்டர் ஜான் கபாரா பூர்வாங்க ஆராய்ச்சிகளை செய்துள்ளார். பெரிய அளவில் எயிட்ஸ் நோயாளிகளை வைத்து விரிவான ஆராய்ச்சி தேவை.


இது போல பிலிப்பைன்ஸ் நாட்டு விஞ்ஞானிகளும் பூர்வாங்க ஆராய்ச்சி நடத்தியுள்ளனர். அங்கும் விரிவான ஆராய்ச்சிமேற்கொள்ளப்பட இருக்கிறது.

# வென்று வாழ்வதே தமிழர் வரலாறு

# அந்த வரலாற்றை நாம் படைப்போம்

## -தூயவன் அரசறிவியற் கல்லூரி விரிவுரையாளர் சி.புலிமறவன்

(அலுவலக செய்தியாளர்)



**''சிங்களத்தலைவர்கள் நாடகமாடினால் என்ன போராடினால் என்ன வென்று வாழ்வதே தமிழர் வரலாறு. அந்த வரலாற்றை நாம் படைப்போம்'' இவ்வாறு தெரிவித்தார் தூயவன் அரசறிவியற்கல்லூரி விரிவுரையாளர் சி.புலிமறவன் கிளிநொச்சியில் நடைபெற்ற மக்கள்சந்திப்பில் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;**

''தமிழர்களுக்குச் சாதாரண சலுகைகளைக்கொடுப்பதற்குக்கூடச் சிங்களவர்கள் தயாரில்லை என்பதனைக் கொழும்பில் அண்மை நாட்களாக நடைபெற்றுவரும் நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

"ஒருகாலத்தில் நாம் அகிம்சைப் போராட்டத்தை நடத்தியபோது சிங்களவர்கள் தமிழர்களை அடிமைகள் போல அடித்து நொருக்கினார்கள். பின்னர் நாம் ஆயுதத்தை எடுத்த போதும் எம்முடன் தமது அப்பாவி இளைஞர்களின் உயிர்களைக் கொட்டி யுத்தம் புரிந்தார்கள். தொடர்யுத்தத்தின் விளைவாக சிங்களத்தின் அரசியல்மூச்சடைத்துக்கிடந்தது. அதனால் சமாதானத்திற்கு வந்தார்கள். சமாதானமோ, தமிழர்களுக்கு எதையாவது செய்யும்படி நிர்ப்பந்தித்தது. தற்போது சிங்கள இனவாத சமூகமே வெகுண்டெழுந்து கோரத் தாண்டவம் ஆடுகிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு உதவுவதை எதிர்த்து உண்ணாமலிருந்து சாவதற்கு சிங்களப்பிக்குகள் துணிந்துவிட்டார்கள். வீதிகளிலிறங்கி ஆர்ப்பாட்டம் செய்யத்தொடங்கி விட்டார்கள். இந்த வரலாறு எதை உணர்த்துகிறது. என்பதனைச் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளும் என நாம் நம்புகிறோம்.

"சந்திரிகாவோ அவரது அணியினரோ உண்மையானவர்களாக இருந்திருந்தால் ஏன் அவர்களால் வீதிக்கு வர முடியவில்லை. பொதுக்கட்டமைப்பிற்கு எதிராகப்பிக்குகளால் உண்ணாவிரதம் இருக்கமுடியுமென்றால் இவர்களால் ஏன்முடியவில்லை. உண்மையில் எல்லாமே ஒரே நிகழ்ச்சி நிரலின் கீழ்த்தான் நடக்கிறது. அவர்கள் எல்லோரும் ஒன்றித்து நல்ல நாடகமாடுகிறார்கள். ஆனால் தனது கண்களை மூடிக்கொண்டு எவருக்குமே தெரியாது என்று நினைத்தபடி பாலைக்களவாகக் குடிக்குமாம் பூனை. இந்த நூற்றாண்டிலும் அந்தப் பூனையைப் போல சிங்களவர்கள் இருப்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

"எமது தலைவரைப்பொறுத்தவரையும் அவர் சிங்கள தேசத்தின் மனோநிலையை நன்கு அம்பலப் படுத்தியிருக்கிறார். எமது மக்களும், அவரின் பின்னால் எதற்கும் தயாராக அணிவகுத்து நிற்கின்றார்கள். அண்மையில் இங்கு வந்திருந்த தமிழக ஓவியர் புகழேந்தி அவர்கள் தான் அவதானித்த விடயமொன்றைத் தெரிவித்திருந்தார். இங்கு மக்களும், தலைவனும் எவ்வளவு நெருக்கமாக ஒன்றித்த சிந்தனையுடன் இருக்கிறார்கள் என்பதனைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். தலைவர் எதைச்சிந்திக்கின்றாரோ அதையே மக்களும் சிந்திக்கின்றார்கள். தனது மக்களின் எதிர்காலத்திற்கு எது தேவையோ அதையே தலைவரும் சிந்திக்கிறார். இவ்வாறானதொரு வெற்றிகரமான அரசியல் சமூகத்தை நான் உலகில் எங்குமே காணவில்லை. இந்த இனத்தை உலகில் எந்த வல்லரசு வந்தாலும் வீழ்த்தமுடியாது என்பதைத் திடமாக உணர்ந்தேன் என்றார். உண்மையில் இவ்வாறுதான் நாம் நினைக்கிறோம். எம்மை எந்த நாடகமாடியும் எவராலும் வீழ்த்த முடியாது. சிங்களவர்கள் நாடகமாடினால் என்ன போராடினால் என்ன வென்று வாழ்வதே எமது வரலாறு அந்த வரலாற்றை நாம் படைப்போம் என்றார் அவர். (லோ)

# ஜே.வி.பி.யின் அமைச்சுக்கள் சனாதிபதி வசம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகித்த ஜே.வி.பி. அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்தாலும் அவர்களுக்கு பதிலாக சனாதிபதி புதிய அமைச்சர்களை உடனடியாக நியமிக்கமாட்டாரென சனாதிபதி செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது

ஜே.வி.பி.யின் நான்கு அமைச்சர்களும் வகித்த அமைச்சுப்பொறுப்புகளை சனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார். ஜே.வி.பி.யினருக்கு வழங்கப்பட்டிருந்த காணி, விவசாய,கால்நடை, நீர்ப்பாசனத்துறை அமைச்சு கலாச்சார மரபுரிமைகள் அமைச்சு,மீன்பிடி நீரியல் துறை அமைச்சு, கிராமிய சிறுகைத்தொழில் அமைச்சு ஆகிய வற்றின் செயலாளர்களை அழைத்து சனாதிபதி பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

# இருபதாம் திகதிக்கு முன் பொதுக்கட்டமைப்பை தோல்வியுறச் செய்ய தே.பி முன்னணி நடவடிக்கை

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புக்கு எதிரான அனைத்து சக்திகளையும் திரட்டி இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்பு பொதுக்கட்டமைப்பைத் தோல்வியுறச் செய்வோம் என தேசிய பிக்குமார் முன்னணியின் செயலர் கலவல்லாகம சந்தனாலோக்கதேரர் கூறியுள்ளார்.

கொழும்பு நிப்போன் விடுதியில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது அவர் மேலும் கூறுகையில்; பொதுக்கட்டமைப்பைத் தோல்வியுறச்செய்யத் தீவிரமாக மக்கள் ஆதரவைத் திரட்டப்போவதாகவும் நாடு பூராகவும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தப்போவதாகவும் கூறியுள்ளார்.

அமில தேரர் உண்ணாவிரதமிருந்தது வாழ்க்கையில் வெறுப்பேற்பட்டு அல்ல. அவர் தாய் நாட்டுக்காக உண்ணாவிரதமிருந்தார். பொலிசார் அதற்குத் தடை ஏற்படுத்தியதைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அப்போது அவர் தெரிவித்தார்.


# வவுனியா சேமமடுப்பகுதியில் த.பு.கழகத்தால் வீடுகள் கையளிப்பு

(வவுனியா)

வவுனியா சேமமடுப் பிரதேசத்தில் இருவெவ்வேறு இடங்களில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் அமைக்கப்பட்ட குடியிருப்புக்கள் கையளிக்கும் நிகழ்வுகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் மூர்த்தி அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கேற்றப்பட்டதையடுத்து தேசியக்கொடி, தமிழர்புனர்வாழ்வுக்கழகக் கொடிகள் என்பன ஏற்றிவைக்கப் பட்டன. போர்சூழல் காரணமாகவும், சமூகப்பொருளாதார ரீதியாகவும் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வரும் மக்களுள் ஒரு தொகுதியினருக்காக வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையின் கீழ் அமைக்கப்பட்ட இக்குடியிருப்புக்கள் சமுதாய மீள்கட்டமைப்புத் திட்ட நிதிப் பங்களிப்புடன் அமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

முதற்கட்டமாக 109 வீடுகளைக் கொண்ட முதலாவது குடியிருப்பின் கல்வெட்டினை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கிஷோர் திரைநீக்கம் செய்துவைத்ததைத் தொடர்ந்து முதலாவது வீட்டினை வவுனியா பிரதேச செயலர் துஷ்யந்தி திறந்து வைத்தார். இரண்டாவது வீட்டினை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்கள் திறந்து வைத்ததை அடுத்து, மூன்றாவது வீட்டினை வவுனியா வடக்கு வலயக் கல்விப்பணிப்பாளர் தண்டாயுத பாணியும், நாலாவது வீட்டினை டென்மார்க் அகதிகளுக்கான பேரவையை சார்ந்த நுண் கருத்துத்திட்ட இணைப்பாளர் கமலனும் , ஐந்தாவது வீட்டினை தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப்பணிப்பாளர் ரவிச்சந்திர னும் திறந்துவைத்ததைத் தொடர்ந்து ஏனைய வீடுகளும் முறையே பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன. இதனைத்தொடர்ந்து



சேமமடுக்கிராமத்திலுள்ள மற்றுமொரு இடத்தில் 84 வீடுகளைக் கொண்ட குடியிருப்பு ஒன்றும் திறந்துவைக்கப்பட்டுள்ளது. இந்தக் குடியிருப்பின் கல்வெட்டினை வவுனியா மாவட்ட பிரதேசசெயலர் துஷ்யந்தி திரைநீக்கம் செய்து வைக்க முதலாவது வீட்டினை அரசியல் துறைதுணைப்பொறுப்பாள் சோ.தங்கனும் ,இரண்டாவது வீட்டினை வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் ஞானமும் திறந்து வைத்ததைத் தொடர்ந்து ஏனைய வீடுகளும் பயனாளிகள் அனைவரிடமும்முறையே கையளிக்கப் பட்டன. வீடுகளுக்கான சான்றிதழ்களை சமுதாய மீள் கட்டமைப்புத் திட்டப் பொறியியலாளர் வசந்தகுமார் வழங்கியிருந்தார். இன் றைய இந்த நிகழ்வில்அரச உத்தி யோகத்தர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், தமிழர் புனர்வாழ்வுத் தொண்டர்கள், போராளிகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்களெனப் பெருமளவானோர்கலந்துசிறப்பித்தனர்.

# அரசாங்கத்திலிருந்து வெளியேறினாலும் எதிர்காலத்தில் சு.கட்சியுடன் கூட்டு உருவாகலாம்

## சோமவன்ச அமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பி அரசிலிருந்து வெளியேறினாலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையில் எதிர்காலத்தில் மீண்டும் கூட்டு உருவாகுவதற்கான சாத்தியம் இருப்பதாக அக்கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு தேசிய நூலக ஆவணக்காப்பக கூடத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்; இப்போது அரசாங்கத்திலிருந்து நாம் ஆழ்ந்த கவலையுடன் வெளியேறு கிறோம் ஆனால் எதிர்காலத்தில் இருகட்சிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஏற்படக்கூடும்.

ஐக்கியமக்கள் சுதந்திரமுன்னணியின் தொடக்கமும் முடிவுமாக இது அமையாது என்றார். அரசாங்கத்திலிருந்து வெளியேறிய தினமே ஜே.வி.பி தலைவர் இவ்வாறு கூறியிருப்பது அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த ஊகங்களுக்கு தீனி போடுமாப் போன்று ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்சவும் கருத்தொன்றை தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சனாதிபதியாக்குவதற்காக ஜே.வி.பியினர் பின்னணியில் நின்றுசெயற்படுவதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் மத்தியில் அச்சம் ஏற்பட்டிருக்கலாம் ஆனால் அதற்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்றும் தெரிவித்தார். சுதந்திரக்கட்சியினருக்கு ஜே.வி.பி. வழங்கிய இரண்டு பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை திருப்பித்தர வேண்டுமென கேட்டீர்களா? எனவி மல்வீரவன்சவிடம் கேட்ட போது தானம்கொடுத்ததைத் திருப்பிக்கேட்கமாட்டோம் புதிய அரசியல் கலாசாரத்தை வெளிப்படுத்தியவர்கள் நாங்கள் அந்தளவுக்கு கீழிறங்க மாட்டோம் எனப்பதிலளித்தார். கட்சியின் செயலாளர் ரின்வின்சில்வா தெரிவிக்கையில்

பொதுக்கட்டமைப்பை எதிர்த்து எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கப் போகின்றீர்கள் கூட்டமைப்பு யார்யாருடன் இணைந்து அமைக்கப் போகின்றீர்கள் என கேட்ட போது; கற்பனையில் எதிர்வு கூறமுடியாது நாட்டின் அரசியல் முன்னெடுப்புகளை அவதானித்து அதன் போது வியூகம் வகுப்போம் நாட்டின் இறைமை ஒருமைப்பாட்டிற்கு கௌரவமளிக்கும்கட்சிகளுடனேயே கூட்டமைப்பு உருவாகும் என்றார்.

# நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் ஆறுமுகன் தொண்டமான் சத்தியாக்கிரகம்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் நேற்று முன்தினம் நாவலப்பிட்டி பொலிஸ நிலையம் முன்பாக சிலமணிநேரம் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தினார்.

பொலிசாரைத் தாக்கிக் காயப்படுத்தியவர்கள் என்று கருதப்படும் இருவர் அதற்காகத்தாம் கைதுசெய்யப்படுவார்கள் எனப்பயந்து தற்கொலை செய்து கொண்டனர். அவர்களின் சடலங்களை உடனடியாக உறவினர்களிடம் ஒப்படைக்கக்கோரியே இ.தொ.கா தலைவர் ஆறுமுகன் தொண்டமான் நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக வீதியில் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்தார். தற்கொலை செய்து கொண்டவர்களுள் ஒருவர் இ.தொ.கா தோட்டக்குழுத்தலைவர் மற்றவர் இ.தொ.கா உறுப்பினர் எனத் தெரிவிக்கப்பட்டது. கடந்த செவ்வாய்க்கிழமை 14ஆம் திகதி ஹீனுகொட்டுவ என்ற தோட்டத்தில் கசிப்புக்காய்ச்சியவர்களைப் பிடிக்க நாவலப்பிட்டிப் பொலிசார் சென்றுள்ளார்கள். அப்போது இ.தொ.கா தோட்டக்குழுத்தலைவரும் அவரது சகாக்களும் பொலிசாரைத் தாக்கினர் என்று கூறப்பட்டது. இதில் நான்கு பொலிசார் காயமடைந்துள்ளனர். தலைமறைவாகியிருந்த தோட்டக்குழுத்தலைவரையும், அவரது சகாக்களையும் நாவலப்பிட்டி பொலிசில் வந்து சரணடையும்படி கூறிவிட்டுப் பொலிசார்திரும்பி விட்டனர். தோட்டக் குழுத்தலைவர் பொலிஸ் நிலையத்திற்குச் செல்ல அஞ்சி அன்றிரவே நஞ் சருந்தியும், மற்றவர் மறுநாள் கழுத்தில் சுருககிட்டும் தற்கொலை செய்து கொண்டனர். சடலங்களை பொலிசார் பிரேத பரிசோதனைக்கு எடுத்துச் சென்றனர். விடயம் அறிந்த இ.தொ.கா தலைவர் ஆறுமுகன் தொண்டமான் நேரடியாக பொலிஸ் நிலையத்திற்குச் சென்று சடலங்களை உறவினரிடம் ஒப்படைக்கக்கோரினார். அதற்கு மரண விசாரணை இன்னும் முடிவடைய வில்லையெனவும் மறுநாட்காலை விசாரணை முடிவடைந்த பின்னரே தர முடியும் எனக் கூறியதை அடுத்தே ஆறுமுகன் தொண்டமான் சடலங்களை ஒப்படைக்கும்வரை அவ்விடத்தைவிட்டு நகரமாட்டேனென பிரதான வீதியில் அமர்ந்து சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டார்.

# தற்காப்பு தாக்குதல் நடத்துவதில் தவறில்லை

# இராணுவத்திற்கு கொட்டகதெனிய ஆலோசனை

(கொழும்பு)

***சிறிலங்கா இராணுவத்தின் மீது நிழல் யுத்தம் தற்போது வலுவடைந்து வருவதால் அவர்கள் தற்காப்பு தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என்று முன்னாள் பிரதிப்பொலிஸ் மா அதிபரும் சிஹல உறுமய உறுப்பினருமான கொட்டகதெனிய ஆலோசனை தெரிவித்துள்ளார்.***

இராணுவத்தினர் மீது தொடரும் தாக்குதல்கள் தொடர்பாக அவர் எழுதியுள்ள கட்டுரையில் இவ்வாறான பாதுகாப்பு ஆலோசனையை முன்வைத்துள்ளார்.

அவர் அக்கட்டுரையில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

"யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ள போதும் இராணுவப் புலனாய்வுப்பிரிவினர் பலர்படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் 1.3 ஆவது சரத்தின் பிரகாரம் விடுதலைப்புலிகளின் மீதான தாக்குதல்களை மேற்கொள்ள முடியாதபடி இராணுவத்திற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

"அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்ட முத்தலிப்பின் மரண வீட்டுக்குச்சென்றிந்தபோது, அங்கு வந்திருந்த முத்தலிப்பின் குழுவிலுள்ள ஏனையோருடன் பேசியிருந்தேன்.

முத்தலிப்பை படுகொலை செய்வதற்கு பிஸ்டல்குழுவினர் கொழும்புக்கு வந்துள்ளார்கள். என்பது தமக்கு முதலே தெரியும் அவர்கள் தங்கியிருந்த இடமும் தமக்குத் தெரியும் என்றும் அந்த இடத்தை தாம் படம் எடுத்து வைத்திருந்ததாகவும் அவர்கள் கூறினர்.

முத்தலிப்படுகொலை செய்யப்பட்ட உடன் தாம் அந்த இடத்தை சுற்றிவளைத்த போது அதற்கிடையில் அவர்கள் அங்கிருந்து தப்பிவிட்டனர். என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இந்தப் பிஸ்டல் குழுவினர் தொடர்பாக இராணுவத்தினர் அறிந்திருந்தும் அவர்களை கைது செய்யவோ அவர்கள் இருந்த இடத்தில் தேடுதல் நடத்தவோ இராணுவத்திற்குஅதிகாரம், சுதந்திரம் இல்லை.

ஏனெனில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் 2.12 ஆவது சரத்தின் படி தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் இராணுவத்திடமிருந்து பிடுங்கப்பட்டிருக்கிறது இப்படியான நிலையில் தனியே கொலை அச் சுறுத்தலின் மத்தியில் இராணுவம் தமது பணியை முன்னெடுப்பது மிகக்கடினம்.

"இராணுவத்தினரின் தாக்குதல் நடத்தும் அதிகாரம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் பிடுங்கப்பட்டிருப்பினும் தற்காப்புக்காக தாக்குதல் நடத்தும் அதிகாரம் எவருக்கும் உரியது. அது தனிமனித சுதந்திரம் அதனை யாரும் மேற்கொள்ளலாம். ஆகவே தமக்கு ஏதாவது அச்சுறுத்தல்வரும்பட்சத்தில் தற்காப்பு தாக்குதலை நடத்தி அதிலிருந்து தப்பிக்க இராணுவத்தினர் பழகிக்கொள்ள வேண்டும்" என்று தெரிவித் துள்ளார்.

# பிக்குகள் மீது தாக்குதல் நடத்த சிலர் திட்டம்

# பாதுகாப்பு வழங்க பொலிசார் முடிவு

(கொழும்பு)

கொழும்பு கோட்டை, புறக்கோட்டைப் பகுதிகளுக்குத் தங்களின் தனிப்பட்ட தேவைகளுக்காக வரும் பௌத்த பிக்குகளின் மீது தாக்குதல் நடத்த சிலர் திட்டமிட்டு வருவதாக தங்களுக்குத் தகவல் கிடைத்திருப்பதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதனால் தனிப்பட்ட தேவைகளுக்காக கொழும்பிற்கு வரும் பிக்குமாருக்குப் பூரண பாதுகாப்பினை வழங்க பொலிசார் நடவடிக்கை எடுத்திருப்பதாக கொழும்பு மத்தியபிரதேசத்திற்குப் பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர் சம்பிக்க சிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக கொழும்புக் கோட்டை, புறக்கோட்டைப் பகுதிகளில் பிக்குமார் மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்களால் நாளாந்த கடமைகள், வியாபார நடவடிக்கைகள் என்பன பாதிக்கப்பட்ட காரணங்களாலேயே கொழும்பிற்கு வரும் பௌத்த பிக்குகள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டிருப்பதாகத் தங்களுக்குத் தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் சம்பிக்க சிறிவர்த்தன தெரிவித்தார்.

இதனால் கொழும்புக் கோட்டை, புறக்கோட்டைப் பகுதிகளில் பௌத்த பிக்குமார் தமது தேவைகளை நிறைவேற்றச் செல்கையில் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார். பிக்குமாரின் பாதுகாப்பிற்காகவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# தமிழர் புனர்வாழ்வுக்கழக கிளை அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு கண்டனம்

## - சனாதிபதிக்கு மகஜர்

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மட்டக்களப்பு மாவட்டக்கிளை அலுவலகத்தின்மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் கடற்கோள் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு தொடர்பான உத்தேசப் பொதுக்கட்டமைப்பை எதிர்க்கும் தீய சக்திகளினால் மேற்கொள்ளப்பட்டதாகும், என்று திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் சனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இக்குண்டுத்தாக்குதல் சம்பவம் குறித்து பாரபட்சமற்ற விசாரணை ஒன்றை நடத்தி குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் படியும் சனாதிபதியை பாராளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் கோரியுள்ளார்.

கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது "வடக்கு கிழக்கு மாகாணத்தில் இன,மத பேதம் பாராது அனைத்து இனங்களைச் சேர்ந்த மக்களுக்கும் மனிதாபிமானப் பணிகளையும் துயர் துடைக்கும் செயற்றிட்டங்களையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டுவருவது தெரிந்ததே தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பாரபட்சமற்ற பணி அனைவராலும் போற்றப்பட்டுள்ளது இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத சக்திகள் தான், இக்குண்டுத்தாக்குதலை நடத்தியுள்ளன".

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தின் மீது இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலை திருகோணமலை மாவட்டத்தமிழர் மக்கள் பேரவையும் கண்டித்துள்ளது

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வடக்கு கிழக்கில் யுத்தம் மற்றும் கடற்கோள் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை மீளக் கட்டியெழுப்பும் பணியை மேற்கொண்டுள்ள தமிழர்புனர்வாழ்வுக்கழகம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் மற்றும் சர்வதேச உதவி வழங்கும் நாடுகளால் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளன. தமிழ் மக்களின் தேசியச்சொத்தாக தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கருதப்படுகிறது. கழகத்தின் மட்டக்களப்பு அலுவலகம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. மனிதாபிமானத்துக்கு எதிரான காட்டுமிராண்டித்தனமான செயலாகும் என்றும் பேரவை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# புலிகளுக்கு எதிராக ஜே.வி.பி தெரிவிக்கும் கருத்துக்களால் புலிகள் மீது மக்களின் ஏக பிரதிநிதித்துவ நம்பிக்கை அதிகரிக்கிறது

## - தொழிலாளர் தேசியசங்கத்தின் பொதுச்செயலர்

ஜே.வி.பி விடுதலைப்புலிகளுக்கு எதிராக தெரிவிக்கும் கருத்துக்களால் தமிழ் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் மீது வைத்துள்ள ஏகபிரதிநிதித்துவ நம்பிக்கையை மேலும் அதிகரிக்கவே செய்யும் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச்செயலர் எஸ்.ஏ கந்தசாமி தெரிவித்துள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்திய இனவாதத்தை இடதுசாரிகள் என்ற போர்வையில் ஜே.வி.பி மீண்டும் முன்னெடுத்துச் செல்கிறது. இதனை அடிப்படையாக கொண்டு அந்தக் கட்சி தமது குறுகிய அரசியல் நலனை தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்கிறது.தமிழர் செறிந்து வாழும் பகுதிகளிலும் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் புத்தர் சிலைகளை வைப்பதன் மூலம் பௌத்த மதத்தை வளர்க்க முடியாது என்பது ஜே.வி.பிக்கு தெரியாத ஒன்றல்ல. எனினும் அதனை மையப்படுத்தி தமது அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்ள அந்த கட்சி முயற்சிக்கிறது. தற்போதைய நிலையில் ஜே.வி.பியின் செயல்களை கண்டு பெரும்பான்மை சிங்கள மக்களே வெறுப்படைந்துள்ளார்கள்.அன்று ஆயுதம் அற்ற நிலையில் தமிழ் மக்கள் இருந்தபோது அவர்களை சிங்கள அரசியல்வாதிகளால் ஏமாற்ற முடிந்தது. ஆனால் இன்று தமிழீழ விடுதலைப்புலிகள் எனும் பாரிய ஆயுதசக்தி தமிழ் மக்களுக்கு பின்னால் இருப்பதனால் சிங்கள அரசியல்வாதிகளின் முன்னைய முனைப்புகள் எதுவும் பயன்தரப்போவதில்லை. இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளை ஆயுதக்குழுவாக மாத்திரம் பார்ப்பதை நிறுத்தி தமிழ் மக்களின் ஏகோபித்த இராணுவமாக ஜே.வி.பி ஏற்றுக் கொள்ளவேண்டிய கட்டம் வந்துவிட்டது எனவும் கந்தசாமி குறிப்பிட்டுள்ளார்.

# பொற்கேணி கிராமத்தில் மாதிரி நூலகம்

தம்பலகாமம், பொற்கேணிக்கிராமத்தில், தமிழர் புனர்வாழ்வுக்கழக திருகோணமலை மாவட்ட நிர்வாகத்தின் நிதியுதவியுடன் பொற்கேணிக்கிராம அபிவிருத்திச்சங்கத்தினால் நிறுவப்பட்ட மாதிரி நூலகம் ஒன்று கடந்த புதன்கிழமை பகல் திறந்து வைக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் தம்பலகாமம் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் இலக்கியன், நூலகத்தின் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். ஆரம்பத்தில் தம்பலகாமம் குளக் கோட்டன் வித்தியாலய அதிபர் க.குணரத்தினம்,கிராம அபிவிருத்தி அதிகாரி பத்மராஜா, பொற்கேணிக் கிராம உத்தியோகத்தர் நாகசோதி ஆகியோர் மங்கல விளக்கேற்றினர் நூலகப் பெயர்ப் பலகையை தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஏ.எஸ். சிங்கராயர் திரை நீக்கம் செய்தார். பொற்கேணிக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.திருச்செல்வம், தமிழர் புனர்வாழ்வுக்கழக தம்பலகாம பிரதேசப் பொறுப்பாளர் நல்லசிவம், பாதிக்கப்பட்டமாணவர்களுக்கான நிதியை ஸ்தாபகர் கனகசபை தேவகடாட்சம், தம்பலகாமம் ஆதிகோணஸ்வரா ம.வி.அதிபர் கே.செல்வநாயகம், தமிழர் புனர்வாழ்வுக்கழக திருமலை மாவட்ட அலுவலக நிர்வாக அதிகாரி கோ.சிவராஜசிங்கம் ஆகியோரும் பேசினார்கள் தமிழர்புனர் வாழ்வுக்கழகத்தின் சார்பில் சிவராஜசிங்கம் நூலகத்திற்கு பத்திரிகைகளையும் கனகசபை தேவகடாட்சம் மற்றும் தலைவர் திருச்செல்வம் நூல்களையும் அன்பளிப்புச் செய்தனர் குளக்கோட்டன் வித்தியாலய மாணவர், ஆசிரியர்கள் நிகழ்வில் பங்குபற்றினர்.பொற்கேணி கி.அ.ச.செயலாளர் எஸ். ஸ்கந்தராஜா நன்றி கூறினார்.

# விடுதலைப்போராட்டத்தை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தியவர் ஓவியர் புகழேந்தி

## - மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

(மன்னார்)

தமிழர் விடுதலைப்போராட்டத்தை உணர்வு பூர்வமான முறையில் தனது ஓவியத்திறனால் வெளிப்படுத்தியுள்ளார். ஓவியர் புகழேந்தி என மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன் தெரிவித்துள்ளார்.

தமிழக ஓவியர்புகழேந்தியின் 'புயலின் நிறங்கள்' என்ற வரலாற்று ஓவியக் கண்காட்சி கடந்த திங்கட்கிழமை மடு பண்டிவிரிச்சான் றோமன்கத்தோலிக்க பாடசாலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்போராட்டம் மற்றும் சிறிலங்கா அரசு தமிழர் மீது மேற்கொண்ட அடக்கு முறைகளை உணர்ச்சி பூர்வமான முறையில் தெளிவு படுத்தித்தந்துள்ளார். என்றும் இது வரலாற்றுப் புகழ்மிக்கதென்றும் இவ்வாறான புகழ்மிக்க கலைஞர்களை தமிழர் வரலாற்றில் மறக்கமுடியாதென்றும் அவர்களுக்கு தனியான இடமுண்டு என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வாடகைச் சீருந்து உரிமையாளர் கழகத்தின் செயலகம் பரந்தனில் திறந்து வைப்பு

வன்னி வாடகைச் சீருந்து உரிமையாளர் கழகத்தின் செயலகம் கடந்த புதன்கிழமை பரந்தனில் திறந்து வைக்கப்பட்டது.

பிற்பகல் மூன்று மணியளவில் பரந்தன் சந்திக்கு அருகில் அமைக்கப்பட்ட இச்செயலகத்திறப்பு விழா இடம்பெற்றது. இந்நிகழ்வினை ஆரம்பிக்கும் முகமாக பொதுச் சுடரினை தமிழீழ காவல்துறை துணைப்பொறுப்பாளர் மாதவன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட தொழிற்சங்கப் பொறுப்பாளரும் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக்கொடியினை பரந்தன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் வின்சன் ஏற்றிவைத்தார். அடுத்து வாடகைச்சீருந்து உரிமை




படம் - சசி

யாளர்கழகச் செயலகத்தின் பெயர்ப்பலகையினை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் திரைநீக்கம் செய்துவைக்க, செயலகத்தினை கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். நடைபெற்ற நிகழ்வில் சிறப்புரையினை தமிழீழ காவல்துறை துணைப்பொறுப்பாளர் மாதவன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் ஆகியோர் நிகழ்த்த தொடர்ந்து வருகைதந்த பல பிரதிநிதிகளும் உரையாற்றியதையடுத்து வாடகைச்சீருந்து பதிவு செய்யும் நிகழ்வும், பதிவு ஆவணம் வழங்கும் நிகழ்வும் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் வன்னி வாடகைச்சீருந்து உரிமையாளர்கள் மற்றும் பொது மக்கள் அரசசார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகள், போராளிகள், பொறுப்பாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச)

-கூட்டணிக்கட்சிகளுக்குள் மோதல்-

# கோவா மந்திரி சபையில் இருந்து தேசியவாத காங்கிரஸ் விலகத்திட்டம்

(புதுடில்லி)

கோவா மாநிலத்தில் கூட்டணிக் கட்சிக்குள் மோதல் ஏற்பட்டதை யொட்டி, மந்திரி சபையில் இருந்து விலக தேசியவாத காங்கிரஸ் திட்ட மிட்டுள்ளது.

கோவாவில் இ.காங்கிரஸ் தலை மையிலான கூட்டணி மந்திரிசபை ஆட்சி செய்து வருகிறது.

எந்தக்கூட்டணியும் மந்திரி சபை அமைக்க முடியாத நிலைமை அங்கு இருந்தது. கடந்த இரண்டாம் திகதி நடைபெற்ற இடைத்தேர்தலில் காங்கிரஸ் மூன்று இடங்களிலும், அதன் கூட்டணிக் கட்சியான தேசிய வாத காங்கிரஸ் ஒரு தொகுதியிலும் வெற்றி பெற்றதைத்தொடர்ந்து காங்கிரஸ் கூட்டணி ஆட்சி அமைத் தது.

காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த பிரதாப் சிங்ரானே முதலமைச்சராக பதவி ஏற்றார். தேசியவாத காங்கி ரஸ் கட்சியைச்சேர்ந்த சட்டப்பேரவை உறுப்பினருக்கு துணை முதலமைச் சராக பதவி அளிக்கப்பட்டது.

கடந்த 12 ஆம் திகதி கோவா மந்திரிசபை விரிவுபடுத்தப்பட்டது. அப்போது தேசியவாத காங்கிரஸ் கட்சிக்கு கூடுதலாக ஒரு அமைச்சர் பதவி கொடுக்கப்படும் என்று எதிர் பார்க்கப்பட்டது. அக்கட்சியைச்சேர்ந்த பிரான்சிஸ்கோ பச்சேகோ மந்திரி சபையில் இடம் பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் தேசிய வாத காங்கிரஸ் கட்சிக்கு மந்திரி பதவி அளிக்கப் படவில்லை. இது அக்கட்சிக்கு பெரிய ஏமாற்றத்தை அளித்துள் ளது.

இதனால் காங்கிரஸ் தேசியவாத காங்கிரஸ் கட்சிகளுக்கு இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. இதன் கார ணமாக தேசிய வாத காங்கிரஸ் கட்சி மந்திரி சபையில் இருந்து விலகவும் திட்டமிட்டுள்ளது. அக் கட்சி தனது துணை முதல் மந்திரி பதவியை ராஜினாமா செய்யும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# விசுவ இந்து பரிஷத்தின் யோசனையை பாரதிய ஜனதாக்கட்சி நிராகரித்தது

(புதுடில்லி)

அரசியலில் இருந்து அத்வானி ஓய்வு பெற வேண்டும் என்றும் ஜின்னா பற்றி தெரிவித்த கருத்துக்காக நாட்டு மக்களிடம் மன்னிப்புக்கேட்ட வேண்டும் என்றும் விசுவ இந்து பரிஷத் தெரிவித்துள்ள யோசனையை பாரதிய ஜனதா நிராகரிப்பதாக அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் பிரகாஷ் ஜவதேகர் கூறினார்.

அத்வானியின் தலைமை மீது பாரதிய ஜனதா முழு நம்பிக்கை வைத்தி ருப்பதாகவும், எனவே அவர் கட்சியின் தலைவராகவும், பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவராகவும் தொடர்ந்து நீடிப்பார் என்றும் ஜவதேகர் புதுடில்லியில் நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில் தெரிவித்தார்.

# எயிட்சை தடுக்கும் அன்புமணிக்கு கொபி அனான் பாராட்டு

இந்தியாவில் எயிட்ஸ் பரவாமல் தடுப்பதற்கும், பாதிக்கப்பட்டவர்க ளுக்கு சிகிச்சை அளிப்பதற்கும் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அன்புமணி ஆற்றிவரும் பணிகளை ஐ.நா தலைமை செயலர் கொபி அனான் பாராட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் அன்புமணிக்குக்கடிதம் எழுதியுள்ளார். அந் தக் கடிதத்தில் எயிட்சை எதிர்த்துப் போராட அமைச்சர் மேற்கொண்டுள்ள முயற்சிகளில் வெற்றிபெற தமது வாழ்த்துக்களைத்தெரிவித்துள்ளார்.

# வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்க ஒப்புதல்

(புதுடில்லி)

வெளிநாடுகளில் வசிக்கும் இந்தி யர்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்க மத்திய மந்திரிசபைக் கூட்டத் தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய மந்திரிசபைக்கூட்டமும், மத்திய மந்திரிசபைக்கான பொருளா தாரக் குழுக்கூட்டமும் டில்லியில் பிரதமர் மன்மோகன்சிங் தலைமை யில் நடந்தது.இந்தக்கூட்டத்தி லேயே இம்முடிவு எடுக்கப்பட்டது.

1950 ஆம் ஆண்டு சனவரி 26 ஆம் திகதிக்குப்பின்பு இந்தியாவில் இருந்து வெளிநாடுகளில் சென்று குடியேறிய இந்தியக்குடிமக்கள் அனைவருக்கும் இரட்டை குடியுரிமை வழங்கப்படும். இதற்காக இந்திய குடியுரிமை சட்டத்தில் திருத்தம் செய்யப்படும்.

ஆனால் 1950 சனவரி 26 ஆம் திகதிக்குப்பின்பு பாகிஸ்தான், வங்காள தேச நாடுகளுக்குக்குடி பெயர்ந்த இந்திய குடிமக்கள் அவர் களுடைய குழந்தைகள், பேரக்குழந் தைகளுக்கு இந்தச்சட்டத் திருத்தம் பொருந்தாது எனவும் தெரிவிக்கப்படு கின்றது.

# அரசியல் சன்னியாசியாகுமாறு அத்வானிக்கு ஆலோசனை

(புதுடில்லி)

அரசியல் சன்னியாசி ஆகிவிடுமாறு அத்வானிக்கு விசுவ இந்து பரிஷத் யோசனை தெரிவித்துள்ளது. பாரதீய ஜனதா தலைவர் அத்வானி சமீபத்தில் பாகிஸ் தானில் சுற்றுப்பயணம் செய்தபோது பாபர் மசூதி இடிக் கப்பட்டதற்காக வருத்தம் தெரிவித்ததோடு, முகமது அலிஜின்னாவை மதசார்பற்றவர் என்றும் கூறினார். இதற்கு ஆர், எஸ்.எஸ், விசுவஇந்து பரிஷத் உள்ளிட்ட சங்க் பரிவார் அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்தன.

இதைத்தொடர்ந்து கட்சித்தலைவர் பதவியை இராஜினாமா செய்த அத்வானி ,பின்னர் அதை வாபஸ் பெற்றார். ஜின்னா பற்றி அத்வானி தெரிவித்த கருத்து பெரும சர்ச்சையை ஏற்படுத்தியது. அத்வானியை விசுவ இந்து பரிஷத்தொடர்ந்து கடுமையாக விமர்சித்து வருகிறது.

விசுவஇந்து பரிஷத் மத்திய ஆலோசனை குழுவின் இரண்டு நாள் மாநாடு உத்தரபிரதேச மாநிலம் ஹரித்து வாரில் நடந்தது. இதில்விசுவஇந்து பரிஷத்தின் முன்னணி தலைவர்களும் இந்து மதத்தலைவர்களும் கலந்து கொண்டனர்.

மாநாட்டில்அத்வானியின் பாகிஸ்தான் பயணம் குறித்து சிறப்பு தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

விசுவ இந்து பரிஷத் தலைவர் அசோக் சிங்கால் நிருபர்களுக்குபேட்டி அளிக்கையில், அரசியலில் வாஜ பாய், அத்வானி ஆகியோரின் சகாப்தம் முடிந்து விட் டது. என்றும் இந்துக்களின் மனதை புண்படுத்தும் வகையில் பேசிய அத்வானி பாரதிய ஜனதா தலைவர் பதவியை விட்டு விலக வேண்டும் என்று கூறினார். மூஸ் லிம்களை சமாதானப்படுத்தும் வகையில் செயற்படும் பாரதிய ஜனதாக்கட்சி "பாரதிய ஜின்னாக்கட்சியாக மாறிவிட்டது" என்றும் குறிப்பிட்டார்.

அயோத்தியில் மத்திய அரசு கையகப்படுத்தியுள்ள 67 ஏக்கர் நிலத்தை ராமர் கோவில் கட்டுவதற்காக உடனடியாக ராமஜென்ம பூமி அறக்கட்டளையிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அசோக்சிங்கால் வற்புறுத்தினார்.


# சேரன் வாணிபம்

## பணிநிலை வேண்டுகை

பணிநிலை – பாரவூர்தி உதவியாளர்

தகைமைகள் – 35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

ஆண்டு 08 வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும்.

நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

வன்னிப்பகுதியில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

சம்பளம் – நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

மேற்படி தகைமைகளையுடையோர் தமது சுயவிபரங்களுடன் குடும்பப் பதிவு அட்டை, பிறப்புச்சான்றிதழ், அடையாள அட்டை, பயண அனுமதி அட்டை என்பவற்றுடனும், அவற்றின் நிழற் பிரதிகளுடனும் 22.06.2005 ஆம் நாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

நடுவப்பணிமனை,
சேரன் வாணிபம்,
யாழ்.வீதி,
கிளிநொச்சி.

(சி.12220)



கிளி. மாவட்ட சிக்கனக்கடனுதவு கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்
கிளிநொச்சி

# பதவி விண்ணப்பம் கோரல்

| | |
|---|---|
| பதவி | :-மாவட்டச்செயலாளர் |
| வயது | :-25-45 |
| சம்பள அளவுத்திட்டம் | :-114/ 09(5000-110x10-120x10-7300)+1250 |
| கல்வித் தகைமை | :-கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் 03 வருட அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் 06 வருடத்திற்குக் குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப்பணியாளர் உயர்தரப்பத்திரச் சான்றிதழ் க.பொ.த உ/தர 03 பாடங்களில் சித்தியுடன் எங்காவது செயலாளராகக், கல்வி உத்தியோகத்தராகக்கடமையாற்றிய 04 வருட அனுபவம். அல்லது பல்கலைக்கழகப்பட்டம்/ முகாமை மட்டத்தில் பணியாற்றிய 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம். |


மேற்படி பதவிக்குத்தகைமையுடையவர்கள் 05.07.2005 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர் சி.க.கூ சமாசம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்,
சி.க.கூ.சமாசம்,
கிளிநொச்சி.

(6279)


# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
10 - 05 - 1955



மறைவு
28 - 06 - 2004

அமரர்

## கணபதிப்பிள்ளை இராசேந்திரம் (ராசு)

(தனுஷன் நகைத் தொழிலக உரிமையாளர்)

ஆண்டு ஒன்று போனதா? அப்பா
ஆறவில்லை எம் இதயம்
இன்றுவரை நம்பமுடியவில்லை-நீங்கள்
இறைவனடி சேர்ந்தீர் என்று

வாழ்ந்திடும் காலமெல்லாம்
மறப்போமா உம்முகத்தை
வருந்தி நாம் அழைக்கின்றோம்
திரும்ப வந்து சேர்ந்திடுவீர்

நி.மு.4ஆம் வட்டாரம், மண்டைதீவு
யாழ்ப்பாணம்,
த.மு. இல132, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(சி.12221)

தகவல்:-
மனைவி, பிள்ளைகள

# பாடசாலைகளுக்கிடையிலான 'அஸ்ரா' கிண்ணம்;

## கிளி. மகாவித்தியாலய அணிக்கு அசத்தல் வெற்றி



50 ஓட்டங்களைப் பெற்று ஆறு விக்கெட்டுக் களை வீழ்த்திய அணித் தலைவர் சி.ஜெயசீலன்.

அகில இலங்கை ரீதியாக பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்பட்டுவரும் அஸ்ரா வெற்றிக் கிண்ணத்திற்கான கடினப் பந்துப் போட்டியில் வடமராட்சி உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணியை கிளி. ம.வி அணி வெற்றிபெற்றது.

கடந்த 15.06.2005 அன்று வடமராட்சி வல்வெட்டித்துறை நெடியகாடு மைதானத்தில் நடைபெற்ற 17 வயதுப் பிரிவு அணியினருக்கிடையேயான இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற உடுப்பிட்டி அ.மி கல்லூரி அணித் தலைவர் அர்சுனராஜ் கிளி. ம.வியை துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

ஆரம்பத்தில் உடுப்பிட்டி அ.மி கல்லூரி அணியினரின் வேகப்பந்து வீச்சில் கிளி. ம.வி 25 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்களை இழந திருந்தது.அடுத்து களமிறங்கிய க.அனுசன் நிதானமாக ஆடி அரைச்சதத்தினை பெற்று அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தார். முதல் இனிங்சில் கிளி. ம.வி அணி ஒன்பது விக்கெட்டினை இழந்து 167 ஓட்டங்களை பெற்ற நிலையில் தமது ஆட்டத்தை இடை நிறுத்தி உடுப்பிட்டி அ.மி கல்லூரியை துடுப்பெடுத்தாட அழைத்தது.

முதல் இனிங்சில் கிளி. ம.வி சார்பாக க.அனுசன் மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடி 63 ஓட்டங்களை குவித்தார். த.யதாசன் 14 ஓட்டங்களையும். சி.ஜெயசீலன் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் உ.அ.மி கல்லூரி சார்பாக சந்துரு மூன்று விக்கெட்டையும் நிருசாந் இரண்டு விக்கெட்டினையும், கோபிநாத் இரண்டு விக்கெட்டினையும் அர்ச்சுணராஜ், கலாதரன் தலா ஒரு விக்கெட்டினையும் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய உ.அ.மி கல்லூரி தனது முதல் இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. "அஸ்ரா கிண்ண" போட்டி விதி முறையின் படி கிளி. ம.வி அணி முதல் இனிங்ஸ் மூலம் வெற்றிபெற்றது.



இரு இனிங்சிலும் 63, 40 என 100 ஓட்டங்களைக் கடந்த க. அனுசன்.

உ.அ.மி கல்லூரி சார்பாக செந்தூரன் 29 ஓட்டங்களையும், ஜெயரஞ்சன் 23 ஓட்டங்களையும் அர்ச்சுணராஜ் 19 ஓட்டங்களையும் நிரூசானந் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

கிளி. ம.வி சார்பாக மிகச் சிறப்பாக பந்து வீசிய அணித் [illegible]ர் சி. ஜெயசீலன் ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். ரவிக்குமார் மூன்று விக்கெட்டுக்களையும், சிவகுமார் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

தமது இரண்டாவது இனிங்ஸை அதிரடியாக ஆடிய கிளி.ம.வி அணியினர் 47 ஓவர்களில் ஆட்ட நேர முடிவின் போது ஏழு விக்கெட்டுக்களை இழந்து 230 ஓட்டங்களைக் குவித்தனர். அணித் தலைவர் சி.ஜெயசீலன் 50 ஓட்டங்களை 57 பந்துகளில் பெற்றார். க.அனுசன் ஆட்டமிழக்காது 40 ஓட்டங்களையும், ம. ஆனற்டிலக்ஸன் 35 ஓட்டங்களையும், துஸ்நந்தன் 22 ஓட்டங்களையும், அமுதகுமார் 19 ஓட்டங்களையும், ரவிக்குமார் 12 ஓட்டங்களையும், ஜெசிதரன் ஆட்டமிழக்காது பத்து ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் உ.அ.மி கல்லூரி சார்பாக ரதீஸ் மூன்று விக்கெட்டுக்களையும் சந்துரு இரண்டு விக்கெட்டினையும், கோபிநாத் ஒரு விக்கெட்டினையும். பெற்றனர். இந்தச் சுற்றுப் போட்டியின் வெற்றி மூலம் கிளி. ம.வி 13 புள்ளிகளை பெற்றுக் கொள்ள, உ.அ.மி கல்லூரி ஒரு புள்ளியை பெற்றுக் கொள்கிறது,



முல்லை மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தால் நடாத்தப்பட்ட சின்னசாளம்பன் அன்பழகன் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் சிறார்கள் ஒலிம்பிக் தீபம் ஏற்றுவதைக் காணலாம்.

## கரும்புலிகள் நாளை முன்னிட்டு மன்னாரில் சைக்கிள் ஓட்டப்போட்டி

மன்னார் மாவட்டத்தில் கரும்புலி தினத்தை முன்னிட்டு ஆண்கள், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியொன்றினை நடத்த மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இப்போட்டியில் கலந்துகொள்ளவிரும்புவோர் மன்னார் மாவட்ட அரசியல்துறை பணிமனையில் இயங்கும் விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் நிலானுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

(18)




## அமரர் பூஜிதா ஞாபகார்த்த சுற்றுப் போட்டி
## இளந்தாரகை, ஸ்கந்தா அணிகள் வெற்றி

அமரர் சத்திய தர்சன் பூஜிதா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக கனகபுரம் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மென்பந்து, கால் பந்து சுற்றுப் போட்டிகளில் நேற்றுக் காலை நடைபெற்ற மென்பந்து துடுப்பாட்ட போட்டியில் இளந்தாரகை அணி ஸ்ரார் அணியை 29 ஓட்டங்களால் தோற்கடித்து அரையிறுதிக்குத் தெரிவானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இளந்தாரகை அணி நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவரில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய ஸ்ரார் அணி 14.5 ஓவரில் 65 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இரண்டாவது போட்டியில் ஸ்கந்தா அணி நான்கு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற என்.ஈ.சி. அணி 13.4 ஓவரில் 58 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. வெற்றி இலக்கு நோக்கி ஆடிய ஸ்கந்தா 12.2 ஓவரில் ஆறு விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதேவேளை, மாலை நடைபெற்ற கால் பந்து போட்டியில் விநாயகர் அணி, தோழர்கள் அணியை 1-0 என்ற கோல் எண்ணிக்கையிலும், உருத்திரபுரம் அணி விளைபூமி அணியை 1-0 என்ற கோல் எண்ணிக்கையிலும் வெற்றிபெற்றன.



தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் முல்லை அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தால் 15-06-2005இல் நடாத்தப்பட்ட கருவேலன்கண்டல் அகஸ்ரின் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழாவில் சிறார்கள் சத்தியப்பிரமாணம் செய்கின்றனர்.

## வவுனியா மாவட்ட விளையாட்டுத் துறையால் வீரர் கௌரவிப்பும், உபகரணம் வழங்கலும்

தமிழீழ விளையாட்டுத்துறையின் வவுனியா மாவட்ட பிரிவினரால் வவுனியா வடக்கு பிரதேச விளையாட்டுக் கழகங்களிற்கான ஒன்றுகூடலும் கௌரவிப்பு நிகழ்வும் நெடுங்கேணி பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

ஆசிரியர் ரூபன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசியக் கொடியினை வவுனியா வடக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் ஏற்றினார். பிரதம விருந்தினர்கள் மங்கல விளக்கை ஏற்றினார்கள்.

இந்நிகழ்வில் மாகாண மட்டத்தில் வலைப்பந்தாட்ட போட்டியிலும், மாவட்ட மட்டத்திலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற குளவிசுட்டான் அ.த.க. பாடசாலை அணிக்கும், நெடுங்கேணி பகுதி பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மகளிர் கால்பந்தாட்ட அணியினருக்கும் ஆறுபதயிரம் ரூபா பெறுமதியான பாதணிகளை வவுனியா மாவட்ட விளையாட்டுத்துறையினர் வழங்கினர். இதனை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பாவும், வன்னி மாவட்ட பா.ம.உ. கிசோர் சிவநாதனும் வழங்கிக் கௌரவித்தனர்.

நிகழ்வில் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிசோர், வவுனியா மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தமிழ்மாறன், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பரந்தாமன், குளவிசுட்டான் அ.த.க. பாடசாலை அதிபர் சிவலிங்கம், பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் கமலன், மாவட்ட விளையாட்டு அதிகாரி அண்ணாத்துரை ஆகியோர் உரை நிகழ்த்தினர். நன்றியுரையினை நெடுங்கேணி பொதுவிளையாட்டுக்கழகத் தலைவர் மயூரன் நிகழ்த்தினார்.

## பந்து வீச்சாளர்கள் பயப்படும் முதல் துடுப்பாட்ட வீரராக கில்கிறிஸ்ட்

எந்த ஆட்டவீரருக்கு பந்து வீச பயப்படுவீர்கள் .... இப்படி ஒரு கேள்வியுடன் முன்னணி பந்து வீச்சாளர்களிடம் கணிப்பு நடத்தியது விஸ்டன் பத்திரிகை. இதில் அதிரடி வீரரான அவுஸ்திரேலியாவின் அடம் கில்கிறிஸ்ட் பந்து வீச்சாளர்களை பயமுறுத்தும் துடுப்பாட்டவீரராக அதிக வாக்குகள் பெற்றுள்ளார். தனது பயம் குறித்து தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் நிடினி கூறுகையில்; "கில்கிறிஸ்ட் நம்ப முடியாத வீரர். எப்போது எப்படி விளாசுவார் என்று யாரும் கணிக்க முடியாது," என்றார்.நியூசிலாந்து சுழல்பந்து வீச்சாளர்வெட்டோரி கூறுகையில்

"கில்கிறிஸ்ட்டுக்கு பந்து வீசும் போது மட்டும் தான் கொஞ்சம் கூடுதல் கவனம் எடுத்துக்கொள்வேன்", என்கிறார். இதுவரை 209 ஒரு நாள் போட்டிகளில் விளையாடியுள்ள கில்கிறிஸ்ட் ஆறாயிரத்து 969 ஓட்டம் குவித்துள்ளார். இதில 840 பவுண்டரிகளும், 94 சிக்சர்களும் விளாசியுள்ளார்.

இப்பட்டியலில் பிரைன்லாறா இரண்டாவதிடம் பெற்றுள்ளார். அவுஸ்திரேலியாவின் முன்னணி பந்து வீச்சாளர்களான கிளெஸ்பி, ஷேன், வட்சன் ஆகியோர் இங்கிலாந்தின் பிளின்டொப்பை பார்த்து பயப்படுவதாக கூறியுள்ளனர்.

## ரெஸ் கொதிக் சதம் கைகொடுக்க இங்கிலாந்திற்கு பத்து விக்கெட் வெற்றி




ரெஸ் கொதிக்கின் சதம் கைகொடுக்க இங்கிலாந்து அணி பங்களாதேசை பத்து விக்கெட் வித்தியாசத்தில் மிக எளிதாக வீழ்த்தியது.

இங்கிலாந்து, அவுஸ்திரேலிய பங்களாதேஷ் அணிகள் பங்கேற்கும் நாட்வெஸ்ட் முத்தரப்பு ஒரு நாள் தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. லண்டன் ஓவல் அரங்கில் நடந்த முதல் போட்டியில் இங்கிலாந்து பங்களாதேஷ் அணிகள் மோதின.


நாணயச் சுறழ்சியில் இங்கிலாந்து களத்தடுப்பைத் தேர்வு செய்தது. வங்கதேசம் வழக்கம் போல் திணறியது. ஒரு கட்டத்தில் ஆறு விக்கெட் இழப்பிற்கு 76 ஓட்டம் எடுத்து தவித்தது. பின்னர் அப்தாப் முகமது ரபிக் இணைந்து அணியை ஓரளவிற்கு மீட்டனர். சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய அப்தாப் நான்கு பவுண்டரி ஓட்டம் இரண்டு சிக்சருடன் 51 ஓட்டம் எடுத்தார். ரபிக் 30ஓட்டம் எடுத்தார். மொர்டாசா 29 ஓட்டம் எடுக்க பங்களாதேஷ் அணி 45.2 ஓவரில் 190 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்தது. இங்கிலாந்து தரப்பில் ஹார்மிசன் நான்கு லுவிஸ் மூன்று, ஏன்கப் இரண்டு விக்கெட் கைப்பற்றினர். அடுத்து களமிறங்கிய இங்கிலாந்து அணி அபார தொடக்கம் கண்டது. தனது 100 ஆவது ஒரு நாள் போட்டியில் விளையாடிய ரெஸ் கொதிக் 16 பவுண்டரிகளுடன் 76 பந்தில் 100 ஓட்டம் விளாசினார். ஸ்ரோஸ் 82 ஓட்டம் எடுத்தார். இருவரும் ஆட்டமிழக்காது இருக்க இங்கிலாந்து அணி 24.5 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 192 ஓட்டம் எடுத்து வெற்றி பெற்றது. விரைவாக வென்ற இங்கிலாந்து போனஸ் சேர்த்து ஆறு புள்ளிகளை முழுமையாகப் பெற்றது. ஆட்ட நாயகனாக ரெஸ்கொதிக் தேர்வு செய்யப்பட்டார்.

# ஆர்ஜென்டீனா, ஜேர்மனி அணிகள் வெற்றி




கான்பெடரேஷன் கோப்பை கால்பந்துப் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் ஜேர்மனி அணி அவுஸ்திரேலியாவையும், ஆர்ஜென்டீனா அணி துனிசியாவையும் வெற்றிகொண்டது. கான்பெடரேஷன் கோப்பை கால்பந்துப் போட்டி ஜேர்மனியில் உள்ள பிராங்பர்ட் நகரில் நடந்து வருகின்றது.

இதில் உலக கோப்பை சம்பியன் பிரேசில், ஐரோப்பிய சம்பியன் கிரீஸ், ஆசிய சம்பியன் ஜப்பான், மெக்சிக்கோ, ஆர்ஜென்டீனா, ஜேர்மனி, துனிசியா, அவுஸ்திரேலியா ஆகிய எட்டு நாடுகள் பங்கேற்றுள்ளன. இதில் முதல் நாளில் நடந்த ஆட்டத்தில் முன்னாள் உலக சம்பியன் ஆர்ஜென்டீனா அணி துனிசியாவை எதிர்கொண்டது. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் ஆர்ஜென்டீனா அணி 2-1 என்ற கோல் கணக்கில் துனிசியாவை தோற்கடித்தது. ஆர்ஜென்டீனா வீரர்கள் ஜூயன் 33 ஆவது நிமிடத்திலும், சேவியர் 57 ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர். மற்றொரு ஆட்டத்தில் அடுத்த ஆண்டு உலகக் கோப்பைப் போட்டியை நடத்தும் ஜேர்மனி அவுஸ்திரேலிய அணியுடன் மோதியது. இதில் ஜேர்மனி அணிக்கு கடும் சவாலாக அவுஸ்திரேலியா விளங்கியது. [illegible]னும் உள்ளூர் ரசிகர்களின் ஆதரவுடன் ஜேர்மனி அணி 4-3 என்ற கோல் கணக்கில் போராடி வெற்றி வெற்றது. ஐரோப்பா [illegible] சம்பியன் போட்டிக்கு பிறகு ஜேர்மனி பங்கேற்கும் முதல் போட்டி இதுவாகும்.



## சிந்தனைக்கு

நாம் ஒன்றுபட்ட மக்களாக ஒரே தேசிய சக்தியாக- அணிதிரண்டு, எமது எதிரியின் சவாலை எதிர் கொள்ளவேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 18-06-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## தவறான கணக்கு!

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஜே.வி.பி யின் காலக்கெடு முடிவடைந்துவிட்ட நிலையில் ஜே.வி.பி அரசாங்கத்தில் இருந்து வெளியேறிவிட்டது. ஜே.வி.பி அமைச்சர்களும் சிலரைத்தவிர ஏனையோர் பதவிவிலகி விட்டனர்.

சுருக்கமாகச் கூறுவதானால் பௌத்த –சிங்கள பேரினவாதத்திற்கான தலைமைப் பொறுப்பைக் கைப்பற்றுவதற்காகவும்– அதன் மூலம் ஆட்சிபீடம் ஏறுவதற்காகவும் ஜே.வி.பி அமைச்சுப் பதவிகளைத்துறந்து எதிர்க்கட்சி வரிசையில் அமரத் தீர்மானித்துள்ளது.

பொதுக்கட்டமைப்பு உருவாவதைத் தடுத்து நிறுத்துவதற்காக ஜே.வி.பி சனாதிபதி சந்திரிகாவிற்குக் காலக்கெடு ஒன்றை விதித்தபோது அதன் அர்த்தமானது ஒன்று, பொதுக்கட்டமைப்பைக் கைவிடுங்கள் அல்லது அரசாங்கத்தை இழப்பீர்கள். அதாவது கவிழ்ப்போம் என்பதாகவே அதன் அறிவுறுத்தல் இருந்தது.

ஆனால், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஜே.வி.பி யின் எச்சரிக்கைக்கு விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கவில்லை. இதற்கு பொதுக்கட்டமைப்புக் குறித்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கொண்டிருந்த அக்கறை காரணமெனக் கூறமுடியாது. ஆயினும், பொதுக்கட்டமைப்புக் குறித்து அவர் மீதிருந்த நிர்ப்பந்தமும், ஜே.வி.பி யின் வற்புறுத்தலுக்குப் பணிந்துபோவதில்லை என்ற அவரது தீர்மானமும் காரணங்களாகும்.

தற்பொழுது சனாதிபதி சந்திரிகாவின் உறுதியான நிலைப்பாடு காரணமாக ஜே.வி.பி அரசாங்கத்தில் இருந்து வெளியேறியுள்ளது. இந்நிலையில் தற்பொழுது கேட்கப்படும் கேள்வியானது ஜே.வி.பி யின் எதிர்பார்க்கைகள் எத்தனை தூரம் வெற்றியளிக்கும். அதற்கான சாத்தியப்பாடுகள் எந்தளவில் உள்ளன என்பதே.

ஜே.வி.பி. தனது காலவரையறையை முன்வைத்தபோது சனாதிபதி சந்திரிகா தமது எச்சரிக்கைக்குக் கட்டுப்பாட்டு அரசாங்கத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் பொதுக்கட்டமைப்பைக் கைவிடுவார். அல்லது தாம் அரசாங்கத்தை விட்டு வெளியேறுவதன் மூலம் அரசாங்கம் கவிழ்க்கப்படுமென்றே எதிர் பார்த்தது.

ஆனால், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோ, ஜே.வி.பி யின் கோரிக்கையை நிராகரித்தது மட்டுமல்ல தமது அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மை எதுவித அச்சுறுத்தலுக்கும் உள்ளாகவில்லை எனவும் தெரிவித்துள்ளார். ஆனால், சனாதிபதி சந்திரிகா கூறுவது போன்று அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மை குறையவில்லை என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. ஏனெனில், ஜே.வி.பியின் நடவடிக்கையால் பெரும்பான்மை அரசாங்கம், சிறுபான்மை அரசாங்கமாக மாறியுள்ளது என்பதே நிதர்சனமானதாகும்.

ஆனால், ஜே.வி.பி எதிர்பார்த்தது போன்று அரசாங்கம் கவிழுமா? என்பது இன்றுள்ள முக்கிய கேள்வியாகும். ஏனெனில் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்தாவதற்கு முன்பாகவே அரசாங்கம் கவிழும் என்பது சந்தேகத்திற்குரியதே.

ஏனெனில், பொதுக்கட்டமைப்பு என்பது சந்திரிகா அரசாங்கத்திற்குத் தற்பொழுது பாதுகாப்பு வழங்கும் கவசம் போன்றதாகியுள்ளது. அதாவது பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஐ.தே.கட்சி எதிர்த்து வாக்களிக்க முடியாததொரு தர்மசங்கடமான நிலையில் இருக்கையிலும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் எதிர்த்து வாக்களிப்பதற்கு வாய்ப்பில்லாத நிலையிலும் ஜே.வி.பி யின் எதிர்பார்ப்பு நிறைவேறுவதற்கான வாய்ப்புஇல்லை என்றே கூறலாம்.

ஜே.வி.பி அரசாங்கத்தைக் கவிழ்க்கத் தீர்மானித்தபோது மற்றுமொரு கூட்டணியை அமைக்கலாம் என நம்பிக்கை கொண்டிருந்தது போன்று அதன் பேச்சுக்கள்/ அறிவிப்புக்கள் இருந்தன. ஆனால், தற்போதைய சூழ்நிலையில் அது சாத்தியமாவதற்கான வாய்ப்புக்கள் பிரகாசமானதாக இல்லை. அதாவது ஜே.வி.பியுடன் யாரும் கூட்டணி வைத்துக் கொள்ளத் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கவில்லை.இதனால் ஜே.வி.பி தனது எண்ணத்தை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு இல்லையென்றே கூறலாம்.

இந்நிலையில் பொதுக்கட்டமைப்பை மையமாகக் கொண்டு சனாதிபதி சந்திரிகாவின் அரசாங்கத்திற்கு ஆபத்து விளைவித்தல் சாத்தியமானதாக இல்லை என்றே கூறலாம். ஐக்கிய தேசியக் கட்சிகூட வேறொரு முக்கிய விடயம் கிடைக்கும் வரையில் சில மாதங்களாவது காத்திருக்க வேண்டியதாகவே இருக்கும்.

ஆகையினால் ஜே.வி.பி இவ்விடயத்தில் தப்பானதொரு கணக்கைப் போட்டுள்ளது என்றே கொள்ளலாம்.அதாவது ஜே.வி.பி யின் எதிர்பார்க்கைகள் எதுவும் தற்பொழுது நிகழ்வதற்கான சாத்தியமில்லை. இதன் மூலம் ஜே.வி.பி தன்னை இரண்டாவது சக்தியாக வளர்த்தெடுத்துக் கொள்ளலாம் என்ற எதிர்பார்க்கையும் அடிபட்டுப்போவதற்கான வாய்ப்புக்களே உள்ளன.

ஏனெனில், இனி சந்திரிகா அரசாங்கத்திற்கு எதிரணியாகவும், பலப்பரீட்சைக்குரியதாகவும் இருக்கப்போவது ஐ.தே.கட்சியே ஒழிய ஜே.வி.பி அல்ல. ஆகையினால் போட்டி அரசியலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐ.தே. கட்சியும் ஈடுபடுவதற்கான வாய்ப்பு இருக்குமே ஒழிய ஜே.வி.பி இரண்டாவது சக்தியாக மாற்றம் காண்பிப்பதற்கான ஏது நிலை ஏற்படும் என்பதற்கில்லை.

# பாராளுமன்றில் எதிரணி வரிசையில் ஜே.வி.பி யினருக்கு ஆசனங்கள் இல்லை!

பாராளுமன்றத்தில் எதிரணி வரிசையில் போதிய ஆசனங்கள் இன்மையால் ஜே.வி.பி யின் 34 உறுப்பினர்களுக்கு ஆளும் கட்சி பகுதியில் இருக்கும் ஆசனங்களிலேயே அமரவேண்டி ஏற்படும் என பாராளுமன்ற பொதுச்செயலாளர் பிரியானிவிஜேசேகர தெரிவித்துள்ளார்

தாங்கள் அரசாங்கத்தை விட்டு வெளியேறி பாராளுமன்றத்தில் சுயாதீனக்குழுவாக செயற்படவுள்ளதாகவும் அதனால் தங்கள் உறுப்பினர்களுக்கு எதித்தரப்பில் ஆசனங்களை வழங்குமாறும் பாராளுமன்ற பொதுச்செயலாளருக்கு கடிதம் அனுப்பியிருப்பதாக வியாழக்கிழமை நடந்த செய்தியாளர் மாநாட்டில் ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்திருந்தார்.

எதிரணிப்பகுதியில் ஜே.வி.பி யின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அமர ஆசனங்கள் இன்மையால் அவர்களின் 39 பாராளுமன்ற உறுப்பினர்களில் 34 பேர்ஆளும் கட்சி பகுதியில் இருக்கும் ஆசனங்களிலேயே அமரவேண்டி ஏற்படும் எனப் பாராளுமன்ற பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் 22ஆம் திகதி பாராளுமன்றம் கூடும்போது ஜே.வி.பி.யின் ஐந்து உறுப்பினர்கள் எதிர்க்கட்சி ஆசனங்களிலும் 34 பேர் ஆளும்கட்சி பகுதி ஆசனங்களிலும் அமருவர்.

தங்கள் உறுப்பினர்கள் இருபக்கங்களிலும் பிரிந்து அமர்ந்த போதிலும் அவர்களின் செயற்பாடுகள் ஒன்றாகவே இருக்கும் என ஜே.வி.பி. உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

# பௌத்தத்தை பாதுகாப்பதாக கூறுபவர்களே அதனை அழித்துக் கொண்டிருக்கின்றனர்

## - அமைச்சர் அத்தாவுட செனவிரத்ன

(கொழும்பு)

பௌத்த மக்களைக் காப்பாற்றுவதாக கூறிவரும் அரசியல் கட்சிகள், தமது கட்சிகளின் செயற்பாடுகளினால் தான் பௌத்த மத்திற்கு அழிவு என்பதை மறந்து செயற்படுகின்றார்கள். பொதுக் கட்டமைப்பினை ஏற்படுத்துவதன் மூலம், எமது நாட்டை அழிவுப் பாதையிலிருந்து மீட்க முடியும் என்பதனை பௌத்த மக்கள் புரிந்து கொள்ளவேண்டும் என வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் தொழில்அமைச்சர் அத்தாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

எமது நாடு பௌத்த நாடாக இருந்த போதிலும் இங்கு பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களும் இருக்கின்றனர். எல்லா மதங்களும் மக்கள் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் இருக்க வேண்டும் என்றே கூறுகின்றன.

ஆனால் இன்று யாரும் இதை மதிப்பதில்லை. கடல்கோளினால் நாம் 50 ஆயிரம் உயிர்களை பலி கொடுத்ததுடன் இலட்சக்கணக்கான வீடுகளும் அழிந்து போயுள்ளன.

வடக்கு கிழக்கில் சேதமடைந்த வீடுகளை அபிவிருத்தி செய்ய பொதுக்கட்டமைப்பினை ஏற்படுத்தியே ஆகவேண்டும் என தெரிவித்துள்ளார்.

# மக்களின் அதிருப்தியைச் சமாளிக்கவே ஜே.வி.பி பொதுக்கட்டமைப்பை கையிலெடுத்தது

## - ஐ.தே.கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

14 மாதங்களுக்கு முன்னர் மக்களிடம் எண்ணற்ற பொய் வாக்குறுதிகளை அளித்து ஆட்சிக்கு வந்த ஜே.வி.பி., இன்று அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலையில் தமது இருப்பை பாதுகாத்துக் கொள்வதற்காக அரசாங்கத்தை விட்டு விலகி உள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதிப் பொதுச் செயலாளருமான திஸ்ஸஅத்தநாயக்க மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போனதால் இன்று மக்கள் மத்தியில், ஜே.வி.பி. குறித்து ஏற்பட்டு வரும் அதிருப்தியை சமாளிக்கும் வகையிலேயே, பொதுக்கட்டமைப்பு பற்றி கூறிக் கொண்டு அரசாங்கத்தை விட்டு விலகியுள்ளனர்.

14 மாதங்களுக்கு முன்னர் அவர்களை நம்பி ஆட்சியை ஒப்படைத்த மக்களை, நடுக்கடலில் விட்டுச் செல்லும் இந்தச் செயல் கோழைத்தனமானது எனத் தெரிவித்தர்

# ஜே.வி.பியை மீண்டும் அழைக்க அமைச்சர்கள் சிலர் முயற்சி!

(கொழும்பு)

ஜே.வி.பி யினரை மீண்டும் அரசாங்கத்துடன் இணைத்துக் கொள்ளும் முயற்சியில் அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள், சிலர் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரதுங்க நேற்று முன்தினம் நாட்டு மக்களுக்காக நிகழ்த்திய உரையில் ஜே.வி.பி யினரை அர சாங்கத்துடன் இணைந்து கொள் ளுமாறு தெரிவித்ததை அடுத்தே இந்த முயற்சியில் குறிப்பிட்ட அமைச்சர்கள் இறங்கியுள்ளதாக தெரியவருகிறது.

இந்த விடயம் தொடர்பில், முக்கிய அமைச்சர்கள் குழு சனாதிபதியை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளதாகவும், தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பிரியாவிடைக்கும் தடை!

(கொழும்பு)

விவசாய காணி நீர்ப்பாசன கால்நடை அமைச்சர் அனுரதிசா நாயக்காஅமைச்சு பதவியில் இருந்து விலகும் பிரியாவிடை நிகழ்ச்சிகள் யாவும் ஊடகங்களில் வெளியாவதற்கு தடை விதிக்கப்பட்டது.

ஊடகவியலாளர் அங்கு செல்வதை பாதுகாப்பு பிரிவினர் தடை செய்தனர். அமைச்சின் செயலாளர் திஸ்ஸ வர்ணகுல சூரியாவினால் இத்தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு நாணயத்தாள்களை மறைத்து எடுத்துச்சென்ற இருவர் கைது!

(கொழும்பு)

ஆறு மில்லியன் ரூபா பெறுமதியான வெளி நாட்டு நாணயத் தாள்களை மறைத்து எடுத்தச்செல்ல முயன்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலிய டொலர்,யூரோ , சுவிஸ் பிராங்க், சிங்கப்பூர் டொலர் மற்றும் அமெரிக்க [illegible] காசோலைகள் என ஆறு மில்லியன் ரூபா [illegible] மதியான நோட்டுக்களை தமது உள்ளாடைக்குள் வைத்து மறைத்து எடுத்துசசெல்ல முயன்ற இரு இந்தியர்கள் நேற்றுக்காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப் பட்டனர்.

யு.எல்.316 விமானத்தின்மூலம் சிங்கப்பூர் நோக்கிப் பயணமாக விருந்தஇவ்விரு பயணிகள் மீதும் சந்தேகம் கொண்ட சுங்கப்பிரிவு அதிகாரிகள் அவ்விருவரையும் சோதனையிட்டதில் இந்தப் பண நோட்டக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட இருவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாவர். இவர்களில் ஒருவர் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே 18 தடவை பயணம் மேற்கொண்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

இவர்களுக்கும் சர்வதேச ரீதியாக பணம் கடத்தும் கும்பலுக்கும் இடையே ஏதேனும் தொடர்புகள் உள்ளனவா என்பது குறித்து தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கைப்பற்றப்பட்ட பணம் அரசுடமையாக்கப்பட்டுள்ளது.

# செந்தளிர் சிறுவர் இல்லத்திற்கான புதிய கட்டட அடிக்கல் நாட்டல்

(அலுவலக செய்தியாளர்)

செந்தளிர் சிறுவர் இல்லத்திற்கான புதிய கட்டட அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று வெகுசிறப்பாக நடைபெற்றது.

கடந்த ஆண்டு சுனாமிப் பேரலை அனர்த்தத்தினால் முற்றாக அழிக்கப்பட்ட செந்தளிர் சிறுவர் இல்லத்தினை அமைப்பதற்கான காணி வள்ளிபுனம் பகுதியில் தெரிவு செய்யப்பட்டு அங்கு புதிய கட்டடத்தினை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.



நோர்வே வெளிவிவகார அமைச்சின் நிதியுதவியுடன் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் பராமரிப்பில் இயங்கும் இச்சிறுவர் இல்லத்திற்கான புதிய கட்டடத்தினை அமைப்பதற்கான இவ் அடிக்கல் நாட்டும் நிகழ்வு பிற்பகல் 3.00 மணியளவில் அதற்காக தெரிவு செய்யப்பட்ட வளாகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வினை ஆரம்பிக்கும் முகமாக பொதுச்சுடரினை நோர்வே நாட்டின் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனப் பணிப்பாளர் வசந்தி, முல்லை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் உபதலைவர் ஆகியோர் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைக்க, தொடர்ந்து சுனாமிப் பேரலையில் சிக்கி உயிரிழந்த செந்தளிர் சிறுவர் இல்ல சிறார்களின் உருவப்படங்களுக்கு அவர்களின் பெற்றோர்களும், உறவினர்களும் தீபமேற்றி மலர் தூவினர். தொடர்ந்து அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

அடிக்கல்லினை நோர்வேயின் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் உயர்அதிகாரியான பாபருபக்கன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் ஆகியோர் நாட்டினர். தொடர்ந்து நடைபெற்ற அரங்கநிகழ்வுகள் செந்தளிர் சிறுவர் இல்ல சிறார்களின் வரவேற்புப்பாடலுடன் ஆரம்பமானது. சிறப்புரைகளை முல்லை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் முகுந்தன், தமிழீழ மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் நிகழ்த்தினர். அடுத்து நோர்வே பிரதிநிதி கிரிஸ் ரின்லுண்டனால் செந்தளிர் சிறுவர் இல்ல சிறார்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் நோர்வே நாட்டின் பெண்கள் அபிவிருத்தி நிறுவன பிரதிநிதிகள், நோர்வே நாட்டின் அன்னைபூபதி சங்க பிரதிநிதிகள் மற்றும் ஏனைய பிரதிநிதிகள் மற்றும் செந்தளிர் சிறுவர் இல்ல ஆசிரியர்கள், மாணவர்கள், போராளிகள், பொறுப்பாளர்கள், பொது மக்கள் எனப் பெரும்பாலானோர் கலந்து கொண்டனர். (ச,தீ,08)

# நோர்வே பிரதிவெளியுறவு அமைச்சர் ஞாயிறு வருகை

(கொழும்பு)

நோர்வேயின் பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கேசன் எதிர்வரும் ஞாயிறன்று இலங்கை வருகிறார்.

நோர்வே ஏற்பாட்டாளர்களால் வரையப்பட்ட பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுத்துள்ள தீர்மானங்களை அடுத்தே இந்த விஜயம் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஞாயிறன்று கொழும்பை வந்தடையும் ஹெல்கேசன் அவர்கள் மறுநாள் திங்கட்கிழமை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்திக்கவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# சுனாமியால் பாதிப்புற்ற மீனவர்களுக்கு 115 படகுகள் நேற்று கையளிப்பு!

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மீனவர்களுக்கு 115 படகுகள் நேற்று கையளிக்கப்பட்டன.

இதுவரை வழங்கப்படாத மீனவர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, கடந்த மாதம் இந்நிறுவனத்தினரால் இதே பகுதிக்கு முதற்கட்டமாக 95 படகுத் தொகுதிகள் சமாசத்தினூடாக அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.




கியூமெடிக்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் முற்பகல் 10.30 மணிக்கு இப்படகுகள் கையளிக்கப்பட்டன.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கு சமாசத்திற்குட்பட்ட ஒன்பது சங்கங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கு இப்படகுகள் வழங்கப்பட்டன. மாமுனை, செம்பியன்பற்று, தாளையடி, மருதங்கேணி, உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, சுண்டிக்குளம் ஆகிய சங்கங்களைச் சேர்ந்தோருக்கே இப்படகுகள் வழங்கப்பட்டன.

கியூமெடிக்கா நிறுவனத்தினரால் வழங்கப்பட்டுவரும் இப்படகுத் தொகுதிகள் அடுத்த கட்டமாக

இப்படகு கையளிப்பு நிகழ்வில் கியூமெடிக்கா நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் தங்கவேல், கடற்புலிகளின் அரசியல்துறையைச் சேர்ந்த செஞ்சேரன் மற்றும் பொதுமக்கள் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் எனப் பெரும்பாலானோர் பங்குபற்றினர். (ச, தீ)

# பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக மகா சங்கத்தினருக்கு விளக்கமளிப்பு

(கொழும்பு)

உத்தேச பொதுக்கட்டமைப்பு தொடர்பாக பௌத்த மகா சங்கத்தினருக்கு விளக்கமளிக்கும் மாநாடு நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் ஆரம்பமானது. இந்த மாநாட்டில் சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் உரை நிகழ்த்தினர்.

பொதுக்கட்டமைப்பு அமைக்கப்பட வேண்டியதன் அவசியம், அதன் கட்டமைப்பு, அதிகாரம் என்பன குறித்து மகாசங்கத்தினருக்கு பல அமைச்சர்கள் விளக்கமளித்தனர். சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இங்கு விசேட உரை நிகழ்த்தினார்.

அவர் தனதுரையில் தெரிவிக்கும்போது, இது முகாமைத்துவம் போன்ற சபை ஆகும். ஒரு வருடம் மட்டுமே இதன் அதிகாரம் இருக்கும். இந்தக் காலப் பகுதிக்குள் எந்தச் சமூகத்திற்கும் இந்தச் சபையால் தீங்கு ஏற்படும் பட்சத்தில் உடனடியாக அதன் செயற்பாடுகளையும் நிறுத்திக் கொள்ளமுடியும். அழிவுக்குட்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளைத் திட்டமிடல், அதற்கான சிபார்சுகளை வழங்கல் இதன் பிரதான செயற்பாடாக இருக்கும். இதைத் தவிர பாரதூரமான அதிகாரங்கள் கிடையாது. இத்தகைய ஒரு கட்டமைப்பை எதிர்ப்பது கேலிக்குரியது.

நாட்டில் அமைதி நிலவினால் தான் வெளிநாடுகளின் உதவி கிடைக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவாகச் செய்து முடிக்கலாம். இல்லையேல் நாடு பொருளாதார ரீதியில் குட்டிச் சுவராகிவிடும் என்றார்.

### புதிய வாக்காளர் பதிவுக்கு அழைப்பு

(அலுவலக செய்தியாளர்)

புதியவாக்காளர் பதிவுகளை மேற்கொள்ளத் தவறியவர்களுக்கான வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே மேற்படி பதிவுகளை மேற்கொள்ளத் தவறியவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பதாக தங்கள் பகுதி கிராம சேவை அலுவலர்களுடன் தொடர்புகொண்டு வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ளும் வண்ணம் கரைச்சிப் பிரதேச செயலர் செல்வி க.சுலோஜினி கேட்டுக்கொண்டுள்ளார். (சோ)

### நாட்டுப்பற்றாளர்....

விரிவுரையாளர் புலிமறவன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நாட்டுப்பற்றாளர் பொன்னையா சிவகாந்தனின் பூதவுடலுக்கு அவரது துணைவியார், தமிழீழ அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஆகியோர் மலர்மாலை அணிவித்தனர்.

நினைவுரையினை போராளிகளான வதனன், தமிழினியன் கிளிநொச்சி தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் அ.பசுபதிப்பிள்ளை ஆகியோர் நிகழ்த்தினர்

பின்பு நாட்டுப்பற்றாளர் பொன்னையா சிவகாந்தனின் பூதவுடல் கிளிநொச்சி இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது. (லோ)

### சிறிலங்கா...

நடந்த இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது மரணமானவர் பொலிஸ் புலனாய்வுத் துறை அதிகாரியான முத்து பண்டார என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

### கல்லடியில்...

ரொருவரும் சிறிலங்காப் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் காயமடைந்தனர்.

கடற்கரையிலிருந்து மட்டக்களப்பு வைத்தியசாலை வீதியிலுள்ள தமது அலுவலகத்தில் பாதுகாப்பரண் அமைப்பதற்காக மணல் ஏற்றிச்சென்ற புளொட் உறுப்பினர்கள்மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கைக்குண்டு வீசப்பட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும், இதில் புளொட் உறுப்பினரான சதாசிவம் சித்திரவேல் (வயது 35) மற்றும் பாதுகாப்பு கடமைக்காகச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் சியம்பலகொடகமகே சுமனதிலக்க (வயது36) ஆகியோர் காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று காத்தான்குடிப் பொலிசார் தெரிவித்தனர்.

### நாட்டை....

மக்கள் விடுதலை முன்னணி, பொதுசன ஐக்கிய முன்னணியையும் ஏனையவர்களையும் சேர்த்துக் கொண்டு புதிய அரசாங்கத்தை அமைப்பதாகக் கூறுகின்றது.

இந்தக் கூட்டமைப்பு இதுவரை என்ன செய்ததெனில், நாங்கள் தீர்த்துவைத்த பிரச்சினைகளைக் குழப்பிவிட்டு மக்களின் பிரச்சினைகளையும் உக்கிரமடையச் செய்ததுடன், நாட்டைக் கஷ்ட நிலைக்கு இட்டுச் சென்று மக்களை அனாதரவாக்கியுள்ளனர் என்றும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

### திருமலை...

இந்நிலையில் திருகோணமலையில் அமைக்கப்பட்டுள்ள புத்தர்சிலை மற்றும் ஏனைய நிர்மாணங்களை அகற்றுவதற்கான உத்தரவை இரத்துச்செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணை செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனுவை திருகோணமலை முச்சக்கர வண்டிச்சாரதிகள் சங்க செயலர் ஏ.எல் கீர்த்தி தாக்கல் செய்துள்ளார். இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மேன்முறையீட்டு நீதிமன்றம் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு இடைக்காலத் தடையுத்தரவை வழங்கியது

இந்த நிலையில் குறிப்பிட்ட தினத்தில் பிரதிவாதிகளான திருகோணமலை பிரதி பொலிஸ் அத்தியட்சகர் உட்பட்டவர்கள் மன்றில் ஆஜராகுமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த புத்தர்சிலையை அகற்றுமாறு திருகோணமலை நீதிமன்ற நீதவான் அளித்த பானது,பௌத்ததர்மத்தின் சிக்குப்பாதகமானது,அந்த தீர்ப்பை வழங்குவதற்கு திருகோணமலை நீதவான் நீதிமன்றததிற்கு அதிகாரமில்லை. எனவே அதனைச் சட்ட விரோத தீர்ப்பு என அறிவிக்கு மாறும் கோரியே மனுதாரரான ஏ.எல் கீர்த்தி தமது மனுவை தாக்கல் செய்துள்ளார்.

### தமிழ்த்தேசிய...

சார்பிரமுகர்கள் அணிதிரண்டு இந்நிகழ்வினை நடாத்தவுள்ளனர்.

நாளைமுற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும் இந்நிகழ்வின் முடிவில் தமிழ் தேசிய இனத்தின் அபிலாசைகள் வாழ்வியல் கோரிக்கைகள் என்பன அடங்கிய பிரகடனம் ஒன்றும் வெளியிடப்படும்.

இந்த எழுச்சி நிகழ்வில் கலந்துகொள்ளும் பல்லாயிரக்கணக்கானோரின் கையெழுத்துகளுடன் வெளியிடப்படும் இப் பிரகடனம் சகல சர்வதேச நாடுகளிற்கும் அனுப்பிவைக்கப்படும்.

இந்நிகழ்வு குறித்து நேற்று முன்தினம் முற்பகல் 11மணியளவில் யாழ்.நகர் வைத்தியசாலை வீதியில் உள்ள சமாதானத்துக்கான மனித வளபண்பாட்டு மையத்தில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்று ஏற்பாட்டுக் குழுவினரால் நடத்தப்பட்டது.

இதில் வணபிதா பேணாட் அடிகளார், மனித நேய அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன் பொதுஅமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சூ.சிறில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை பொறுப்பாளர் கண்ணன் உட் பட்டோர் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்தனர்.

தமிழினத்தின் அபிலாசைகளை பௌத்த சிங்கள பேரினவாதிகள் ஒன்று திரண்டு நின்று எதிர்க்கும் இந்த சந்தர்ப்பம் எமது சமூகம் எமது அபிலாசைகளையும் பௌத்த சிங்கள பேரினவாத மேலாதிக்கத்தை சர்வதே சத்துக்கு எடுத்துரைக்க வேண்டிய கட்டாயம் எமக்கு தோன்றியிருப்பதாக இம்மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (சு,33)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது